ஜூன் 2015 June | இதழ் 293 ISSUE

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION









உலகின் முதலாவது
தமிழ் பிரதமர்

25 வது ஆண்டு
25th Year

Growing
with the
Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு முகாமையாளர் சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

விநியோக இணைப்பாளர்
இ. சிவலிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
என். குமாரதாஸன்
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

## வரியிறுப்பாளரின் வாக்கு உரிமை

கனடிய மத்திய அரசுக்கான பொதுத்தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் சட்டம் சேர் ஜோன் ஏ. மக்டொனால்ட் பிரதமராகவிருந்தபோது, 1885ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

அதிலிருந்து பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் மாகாண அரசாங்க தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டது. 1919ம் ஆண்டிலேயே ஆண்களுக்குச் சமனாக பெண்களும் வாக்களிக்கும் சட்டம் கனடாவில் நிறைவேற்றப்பட்டது.

வாக்குரிமை வழங்கும் முறைமை படிப்படியாக இங்கு முன்னேற்றம் கண்டு வந்திருப்பினும், கனடாவில் பிரஜாவுரிமை (Canadian citizenship) பெற்றவர்கள் மட்டுமே வாக்களிக்க முடியுமென்ற சட்டத்தில் எந்தவிதமான மாற்றமும் கொண்டு வரப்படவில்லை.

மத்திய, மாகாண அரசாங்கங்களின் தேர்தல்களைவிடக் கூடுதலானவர்கள் அக்கறையுடன் பங்கேற்கும் ஒன்றாக உள்ளூராட்சிச் சபைகளுக்கான (நகர சபைகள், மாநகர சபைகள், பிரதேச சபைகள்) தேர்தல்கள் அமைந்துள்ளதற்குப் பல காரணங்கள் உண்டு.

பாடசாலைகளின் நிர்வாகம், போக்குவரத்து, சமூக வீடமைப்பு, வீதித் திருத்தம், நகரக் காவலர் மற்றும் தீயணைப்புப்படையின் சேவை போன்ற அன்றாட அத்தியாவசிய விடயங்களை உள்ளூராட்சிச் சபைகளே கையாள்வதால், இதில் உள்ளூர் மக்களின் பங்களிப்பும் சிரத்தையும் கூடுதலாக இருப்பது தவிர்க்க முடியாதது.

ஆனால், உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களிலும் கனடியப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் மட்டுமே வாக்களிக்க முடியுமென்று சட்டம் கூறுவதால், அக்கறையுள்ள கணிசமானவர்கள் வாக்களிக்க முடியாதிருப்பது கடந்த சில ஆண்டுகளாக கவனிக்கப்பட்டு வருகின்றது.

அமெரிக்கா, நியுஸிலாந்து மற்றும் ஐரோப்பாவிலுள்ள சுமார் நாற்பது நாடுகளில் பிரஜாவுரிமை பெறாத - ஆனால் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்கள் (Permanent Residents) உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் இவர்கள் அந்த நகரங்களின் வரியிறுப்பாளர்களாக இருப்பது. ஆனால் இந்த உரிமை கனடாவில் இன்னமும் மறுக்கப்பட்டு வருகிறது. நாம் வாழும் ரொறன்ரோ நகரைப் பொறுத்தளவில் இங்குள்ள சுமார் 25 லட்சம் மக்கள் புதிய குடிவரவாளர்கள். இவர்கள் இங்கு வந்து குடியேறிய நாளிலிருந்து அன்றாடம் வரி செலுத்தி வருபவர்கள். ஆனால் இவர்கள் பிரஜாவுரிமை பெறாதவர்கள் என்பதால் வாக்குரிமை மறுக்கப்பட்டு வருகின்றது.

நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களுக்கு நகரசபைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கக்கூடாது என்ற பக்கமே ரொறன்ரோ நகர மேயர் ஜோன் ரோறி இருக்கின்றார். ஆனால் சாதகமான பக்கத்தில் மிசிசாகா மற்றும் ஏஜக்ஸ் நகர மேயர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மாகாண அரசாங்கம் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து, சகல நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டிய காலமும் நேரமும் வந்துவிட்டது! இதன் மூலமே சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகள் கணிசமான அளவில் தெரிவுசெய்யப்பட முடியும்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

Circulation Manager
R. R. Rajkumar

Circulation Coordinator
R. Sivalingam

Public Relation
N. Kumaradasan
P. Sivasubramaniam
Pon. Sivakumaran

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது தமிழ் பிரதமர் வீராசாமி நாகமுத்து

# First Tamil Prime Minister Veerasamy Nagamootoo



தென்னமெரிக்காவிலுள்ள கயானா குடியரசின் புதிய பிரதமராகக் கடந்த மாதம் 26ம் திகதி பதவியேற்ற திரு. மோசஸ் வீராசாமி நாகமுத்து (67), உலகில் பிரதமர் பதவியை வகிக்கும் முதலாவது தமிழர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்னர் தொழிலாளர் குடும்பமாக கயானாவில் குடியேறியவர்கள் குடும்பத்தில் வந்த இவர், இந்தியாவின் தமிழகத்திலிருந்து வந்த வம்சாவழித் தமிழராவார்.

சுமார் 177 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயரால் கரும்புத் தோட்டத்தில் கூலிகளாக வேலைசெய்ய கயானாவுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் இவரது மூதாதையர். கயானாவின் மொத்த சனத்தொகையில் 44 சதவீத ஆட்கள் இந்திய வம்சாவழியினர். இவர்களில் தமிழர் மூன்று சதவீதம் மட்டுமே. முதலில் ஆசிரியராகவும், பின்னர் சட்டத்தரணியா-கவும் விளங்கிய இவர் நல்லதொரு எழுத்தாளருமாவார்.

1964ல் கயானாவின் மக்கள் முன்னேற்றக் கட்சியில் இணைந்து 1992ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு. நாகமுத்து, நான்கு ஜனாதிபதிகளின் கீழ் பல்வேறு அமைச்சுப் பதவிகளைத் தொடர்ந்து வகித்துள்ளார். 2011ல் மாற்றத்துக்கான கயானாவின் கூட்டணிக் கட்சியில் சேர்ந்த இவர் அதில் போட்டியிட்டு வெற்றிபெற்று இப்போது பிரதமராகியுள்ளார்.

இதற்கு முன்னர் எந்தவொரு நாட்டின் பிரதமராகவும் தமிழர் ஒருவர் இருந்ததில்லை. சிங்கப்பூர் குடியரசின் தலைவராக எஸ். ஆர். நாதன் இருந்துள்ளார். சிலர் துணைப் பிரதமராக இருந்துள்ளனர். அமைச்சர்களாக இலங்கை, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், பிஜி, தென்னாபிரிக்கா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் தமிழர்கள் பலர் இருந்துள்ளனர்.

# 'போலித் திருமண'ங்களைக் கண்டுபிடிக்க குடிவரவுத் திணைக்களம் கையாளும் முறை இனவாதக் குற்றமென கண்டனம்

## Immigration guide for detecting marriage fraud called 'racist and offensive'

திருமணம் செய்யும் கனடியர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை 'ஸ்பொன்சர்' செய்யும்போது, அதனைப் பரிசீலிக்கும் வேளையில் கையாளப்படும் முறைக்கு எதிராகப் பல கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பயிற்சியின்போது வழங்கப்பட்டுள்ள 'குடிவரவு வழிகாட்டி' என்னும் கையேடு இனவாதம் நிரம்பிய குற்றத்துக்குரியது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்களைக் கனடாவுக்குள் இலகுவாக 'இறக்குவதற்காக' மேற்கொள்ளப்படும் 'போலியான திருமணங்கள்' தொடர்பாக பல எச்சரிக்கைகளை கனடிய குடிவரவுத் திணைக்களம் அண்மைய நாட்களில் வெளியிட்டு வந்தது. இதனைத் தடுப்பதற்குப் பல முயற்சிகளையும் திணைக்களம் அடுத்தடுத்து மேற்கொண்டது.

இந்த நடவடிக்கைகளினால், உண்மையான திருமணங்களின் ஸ்பொன்சர்கள் கேள்விக்குட்படுத்தப்பட்டதாகவும், தேவையற்ற தாமதங்களையும் - பல சந்தர்ப்பங்களில் அவை நிராகரிக்கப்பட்டதையும் காணமுடிவதாக சம்பந்தப்பட்டவர்கள் புகாரிட்டுள்ளனர்.

இவ்வேளையில், திருமண ஸ்பொன்சர் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் அதிகாரிகளுக்கான பயிற்சி அரங்குகளில் கையளிக்கப்பட்ட கையேடு வெளிச்சத்துக்கு வந்து பலரையும் அதிர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளது.


மூன்று பக்கங்களைக் கொண்ட இந்தக் கையேடு, 'உறவுக்கான சான்று' என்ற தலைப்பைக் கொண்டது. திருமண உறவு முறையான ஸ்பொன்சரை நிரூபிப்பதற்கான சான்றுகளென்று பல விடயங்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளது. சில நாட்டு மக்களின் கலாசாரங்களுக்குப் புறம்பான 'புதுமணத் தம்பதிகள் உதட்டில் முத்தமிடும் படம்' போன்ற சான்றுகள் இங்கு முக்கியமாகக் கேட்கப்படுகின்றன.

திருமணத்துக்குப் பின்னர் தேனிலவு செல்லாதவர்கள், திருமணத்தின்போது வைரமோதிரம் பரிமாறாதவர்கள் இந்த ஸ்பொன்சர் விடயத்தில் சந்தேகமானவர்களாகப் பார்க்கப்படுகின்றனர் என்பது சில உதாரணங்கள்.

ஒவ்வொருவரையும் எந்த நாட்டவர், அவரது கலாசாரப் பின்னணி என்ன என்று நோக்காது அனைவரையும் சமமாகப் பார்க்கும் வகையில், எந்த ஏற்றத் தாழ்வுமின்றி விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் வகையில் ஸ்பொன்சர் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'வசதி கருதிய திருமணங்கள்' (marriages of convenience) என்னும் போலியான திருமணங்களை (marriage fraud) அடையாளம் காண்பதற்காகத் தயாரிக்கப்பட்ட இந்தக் கையேடு, இனவாதம் நிரம்பிய குற்றச்செயலானது என்று இதன் மீது கண்டனம் தெரிவிப்போர் கூறுகின்றனர்.

"போதிய நிதி வசதியற்றோர் தேனிலவுக்குச் செல்ல முடியாதிருக்கலாம்; வைர மோதிரம் பரிமாறாதிருக்கலாம்; இன்னொரு நாட்டவரை அல்லது வேறொரு மதத்தவரை ஒருவர் திருமணம் செய்யலாம்" - இவைகளை அடிப்படையாக வைத்து இவற்றைப் போலியான திருமணங்கள் என்று முத்திரை குத்துவது எந்த வகையில் நியாயமானது என்பது இவர்கள் முன்வைக்கும் கேள்வி.



சில குறிப்பிட்ட இனங்கள் மீதும் சில நாட்டவர் மீதும் குறிவைத்து பாரபட்சமான வகையில் திருமண ஸ்பொன்சர் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் நடைமுறை ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று அகதிகளுக்கான சட்டவாளர்கள் பலர் கருத்துரைத்துள்ளனர்.●

எஸ்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடிய நாட்டின் மேன்மை தங்கிய தலைமைப் பதவியில் முடிக்குரிய மகாராணி இருப்பதற்கும், கனடிய தேசிய கீதத்தில் முடியாட்சிக்கு மரியாதை வழங்குவதற்கும் கனடிய மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு மேலோங்கி வருகின்றது. அண்மைய கருத்துக் கணிப்பொன்று இதனை வெளிப்படுத்தியுள்ளது. கனடிய நாட்டவர் ஒருவரே கனடிய நாட்டின் தலைமைப் பதவியிலிருக்க வேண்டுமென்று அதிகமானவர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர். முக்கியமாக இளவரசர் சார்ள்ஸ் கனடிய நாட்டின் தலைமைப் பதவிக்கு வருவதை 54 வீதமான கனடியர்கள் எதிர்த்துள்ளனர்.

பயங்கரவாதச் செயல்கள், சதி நடவடிக்கைகள், வேற்று நாட்டு அரசாங்கங்களுக்கு உளவு பார்த்தல் போன்றவைகளில் ஈடுபடுபவர்களின் கனடியப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யும் அதிகாரம் கடந்த மாதம் 29ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கான சட்டம் கடந்த வருடம் ஜுன் மாதத்தில் முதலில் கொண்டு வரப்பட்டது. இரட்டைப் பிரஜாவுரிமை பெற்று கனடாவில் வசித்து வருபவர்களும் மேற்சொன்ன குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டால், அவர்களின் கனடியப் பிரஜாவுரிமை மீளப்பெறப்படுமென்று அமைச்சர் அலக்ஸாந்தர் அறிவித்துள்ளார்.

விமானப் பயணிகளின் கைப்பொதிகள் விடயத்தில் சில புதிய நடைமுறைகளை 'ஏயர் கனடா' கடந்த மாத இறுதி வாரத்திலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு பயணியும் தம்முடன் கையில் இரண்டு பொதிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவாராயினும் அவற்றின் அளவு, எடை என்பன கவனத்தில் எடுக்கப்படும். இவை கூடுதலான அளவு அல்லது எடையுடையதாக இருப்பின் விமானத்தின் பொதிப் பகுதிக்கு அனுப்பப்பட்டு அதற்குரிய மேலதிக கட்டணம் அறவிடப்படும். இது தொடர்பான விபரங்களை 'ஏயர் கனடா' இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

Canada Pension Plan (CPP) எனப்படும் கனடிய ஓய்வூதியத் திட்ட கொடுப்பனவாகக் கனடியர்கள் தத்தமது சுயவிருப்பத்தின் பேரில் அதிகமான தொகையைச் செலுத்துவதற்கு வசதியாகச் சட்ட மாற்றத்தைக் கொண்டு வருவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இதன் முதற் கட்டமாக, மக்களின் கருத்துகளை அறிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. சட்டப்படியான தொகையைவிட மேலதிகமான தொகையை ஓய்வூதியத்துக்குச் செலுத்தினால், ஓய்வூதியகால வருமானம் அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராறியோவின் ஹால்ரன் பிரதேச காவற்துறையில் அத்தியட்சகராகப் பணியாற்றி வரும் தமிழரான நிசாந்தன் துரையப்பா, அங்குள்ள புதிய குடிவரவாளர்களுக்கு உதவும் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி அனைவரதும் மதிப்பைப் பெற்றவராகியுள்ளார். பொலிஸ் கான்ஸ்டபிளாகச் சில வருடங்களுக்கு முன்னர் சேவையில் இணைந்த இவர் தமது பல்துறைத் திறமை காரணமாக சார்ஜன்ட், கூட்டிணைப்பாளர், பொறுப்பதிகாரி ஆகிய பதவிகளைக் குறுகிய காலத்தில் பெற்று தற்போது அத்தியட்சகராகியுள்ளார்.

உலகின் மகிழ்ச்சியான நாடுகளில் கனடா ஐந்தாவது இடத்திற்கு வந்துள்ளது. கடந்தாண்டில் கனடா ஆறாம் இடத்தில் நின்றது. பொருளாதார வளர்ச்சி, மனித ஆரோக்கியம், சுகாதார-வைத்திய வசதி, தேசிய வாழ்க்கைப் புள்ளி ஆகியவைகளை அடிப்படையாக வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற நாடுகள் பின்வருமாறு: 1. சுவிற்சர்லாந்து, 2. ஐஸ்லாந்து, 3. டென்மார்க், 4. நோர்வே, 5. கனடா. இத்தெரிவில் அமெரிக்கா 15வது இடத்தையும், பிரிட்டன் 21வது இடத்தையும் பெற்றுள்ளன.

இந்த வருடம் நடைபெறவுள்ள கனடிய பொதுத் தேர்தலில் தாங்கள் பதவிக்கு வந்தால் வீடுகளுக்கான தபால் சேவை தொடருமென என். டி. பி.யின் தலைவர் தோமஸ் முல்கெயர் உறுதியளித்துள்ளார். ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்த வீடுகளுக்கான தபால் விநியோகமும் மீள ஆரம்பிக்கப்படுமென என். டி. பி. தெரிவித்துள்ளது. கனடாவிலுள்ள ஐந்து மில்லியன் வீடுகளுக்கான தபால் விநியோகத்தை நிறுத்திவிட்டு, பொதுவான பெட்டிகளில் இவைகளை வழங்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்போவதாக கனடிய தபால் இலாகா ஏற்கனவே அறிவித்திருந்தது.

## பால. சிவகடாட்சத்தின் இரு நூல்கள் வெளியீடு

முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் இரண்டு நூல்களின் வெளியீடு இந்த மாதம் 6ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணி முதல் 7 மணி வரை ஸ்காபரோ 3001 மார்க்கம் வீதியிலுள்ள பாரதி கலைக்கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சரசோதி மாலை என்னும் நூல் சமூகப் பண்பாட்டுப் பார்வையின் முதலாம் பாகமாகும். சரசோதி மாலை எனும் காலக்கணிதம் (கி.பி.1310) என்னும் நூல் இரண்டாம் பாகத்தை உள்ளடக்கியது. இரண்டு நூல்களையும் தமிழ்நாட்டிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பதிப்பித்துள்ளது.

## 43 வருடங்களின் பின்னர் அல்பேர்ட்டா மாகாணம் என். டி. பி. வசமானது!

அல்பேர்ட்டா மாகாண சபைக்குக் கடந்த மாதம் 5ம் திகதி நடைபெற்ற தேர்தலில் என்.டி.பி. கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. 44 உறுப்பினர்களே பெரும்பான்மைக்குத் தேவையான இடத்தில் என். டி. பிக்கு 53 இடங்கள் கிடைத்தன. கடந்த 43 ஆண்டுகளாக மாகாணத்தை ஆண்டு வந்த கன்சர்வேடிவ் கட்சி பத்து இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று பெரும் தோல்வியைத் தழுவிக் கொண்டது. புதிய முதலமைச்சராக என். டி. பி. யின் றச்சால் நெற்லி என்ற பெண்மணி பதவியேற்றுள்ளார்.

## நகரசபைத் தேர்தலுக்கு விருப்பு வாக்கு முறை?

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள நகர சபைத் தேர்தலில் 'விருப்பு வாக்களிப்பு' (Ranked ballot) முறையை அறிமுகம் செய்ய ஒன்ராறியோ மாகாண அரசு முன்வந்துள்ளது. இதற்கேற்ற வகையில் நகர சபைகளுக்கான தேர்தல் சட்டம் மாற்றியமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றமானது ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு 1, 2, 3 என்று இலக்கமிட்டு விருப்பு வாக்களிக்க வழிசெய்யும். முதற் சுற்று எண்ணிக்கையில் எவராவது அறுதிப் பெரும்பான்மையைப் பெறத்தவறின், அடுத்த விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றி முடிவு அறிவிக்கப்படும். இந்த மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக பொதுமக்கள் ஆலோசனையை முதலில் பெறுவதற்கான கூட்டங்களை நடத்த ஒன்ராறியோ அரசு முன்வந்துள்ளது.

(இரண்டாம் பக்கத்தைப் பார்க்கவும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்ராறியோ கன்சர்வேடிவ் புதிய தலைவர் பற்றிக் பிறவுண்



ஒன்ராறியோ புறொகிறசிவ் கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவராக திரு. பற்றிக் பிறவுண் கடந்த மாதம் தெரிவானார். கனடாவை ஆட்சி புரியும் ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் கட்சியின் பரி (Barrie) தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த பற்றிக் பிரவுண், மாகாண புதிய தலைமைப் பதவியைப் பெற்ற பின்னர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்தார்.

36 வயதான பற்றிக் பிறவுணுடன் கட்சியின் விற்பி - ஒஷாவா மாகாண சபை உறுப்பினரான கிறிஸ்ரின் எலியற் (60) நேரடியாக தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டார். இதில் பற்றிக் பிறவுணுக்கு 61.6 வீதமான வாக்குகளும், கிறிஸ்ரினுக்கு 38.2 வீதமான வாக்குகளும் கிடைத்தன. பத்து மாதங்களாக இத்தலைமைப் பதவிக்கான பரப்புரை இடம்பெற்றது. இதில் ஒன்ராறியோவாழ் தமிழர்கள் பெருமளவில் பற்றிக் பிறவுணுக்கு ஆதரவு வழங்கி அவரை வெற்றியடையச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

பற்றிக் பிறவுண் தற்போது மாகாண சபையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினராகவில்லாத காரணத்தால், புதிய தலைமைப் பதவியை ஏற்றதை அடுத்து வரும் ஆறு மாத காலத்துள் ஏதாவதொரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் மட்டும் இப்பதவியைத் தொடர்ந்து வகிக்க முடியும். ஒன்ராயோ மாகாண அரசை கத்லின் வின் தலைமையிலான லிபரல் கட்சி ஆட்சி புரிந்து வருகின்றது. பற்றிக் பிறவுண் தலைமையிலான புறோகிரசிவ் கட்சிக்கு 28 உறுப்பினர்கள் உள்ளனர். அன்ட்ரியா ஹொவார்ட் தலைமையிலான என். டி. பி கட்சியில் இருபது உறுப்பினர்கள் உள்ளனர்.●

கன்சர்வேடிவ் கட்சியின் 28 பேரில் எவராவது ஒருவர் தமது பதவியை ராஜிநாமாச் செய்து பற்றிக் பிறவுண் அங்கு இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறச் செய்தால் அவர் சட்ட மன்ற உறுப்பினராவார். இவர்களில் 19 உறுப்பினர்கள் கடந்த மாத கட்சித் தலைவர் தேர்தலில் கிறிஸ்ரினை ஆதரித்தவர்கள்.

## பிரித்தானியாவில் கன்சர்வேடிவ் எதிர்பாராத பெரும்பான்மை! டேவிட் கமரூன் மீண்டும் பிரதமர்



பிரித்தானியாவில் கடந்த மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி எதிர்பராத வகையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இதன் தலைவரான டேவிட் கமரூன் தொடர்ந்து பிரதமராகியுள்ளார். தோல்வியைத் தழுவிய தொழிற்கட்சி மற்றும் லிபரல் டெமோகிரட்டிக், யுனைட்டெட் கிங்டம் இன்டிபென்டன்ட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தங்கள் பதவியைத் துறந்துள்ளனர். 650 உறுப்பினர்களைக் கொண்ட பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கட்சிகள் கைப்பற்றிய ஆசனங்களின் எண்ணிக்கை வருமாறு: கன்சர்வேடிவ் 331, தொழிற்கட்சி 232, ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி 56 (கடந்த தேர்தலில் இக்கட்சி 6 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றது).●

## நீதி அமைச்சர் பீட்டர் மக்கே அரசியலிலிருந்து ஓய்வு



கனடிய மத்திய அரசின் நீதி அமைச்சர் பீட்டர் மக்கே (49) அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாகக் கடந்த மாதம் 29ம் திகதி தமது நொவாஸ்கோஷியா தொகுதியில் வைத்து அறிவித்தார். இதன் பிரகாரம், இந்த வருடம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இவர் மீண்டும் போட்டியிட மாட்டார். ஸ்டீபன் ஹாப்பருடன் இணைந்து ஒரு தசாப்தமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மக்கே, முன்னர் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் பதவிகளையும் வகித்தவர்.

2008ம் ஆண்டில் இவர் கனடிய புறொகிறசிவ் கட்சியின் தலைவராகவும், ஸ்டீபன் ஹாப்பர் கனடியன் அலையன்ஸ் கட்சியின் தலைவராகவுமிருக்கையில் இருவரும் இணைந்து ஒப்பமிட்டே இன்றைய கனடிய கன்சர்வேடிவ் கட்சியை உருவாக்கினர். 18 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பீட்டர் மக்கேயின் தந்தை எல்மர் மக்கே முன்னர் மல்றோனி அரசில் அமைச்சராகவிருந்தவர்.

ஈரானிய மனித உரிமைச் செயற்பாட்டாளரான நஸானின் அஃப்சின்-ஜாமைத் திருமணம் புரிந்த மக்கேயுக்கு ஓர் ஆண் குழந்தையுண்டு, இரண்டாவது குழந்தைக்கும் விரைவில் தந்தையாகவுள்ளார். தமது குடும்பத்துடன் அதிக நேரத்தை ஒதுக்குவதற்காகவே அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார்.●

## மேன்முறையீட்டில் விடுதலையான ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர்!



தமிழ்நாட்டில் சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பெற்ற ஜெயலலிதா மேன்முறையீட்டு விசாரணையில் விடுதலையானதையடுத்து, மீண்டும் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார். முதலில் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து சிறீரங்கம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இவர் இழக்க நேர்ந்தது.

இப்போது முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளமையால், அவர் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவாக வேண்டியது கட்டாயமாகியுள்ளது. இதற்கு வசதியாக ஆர். கே. நகர் தொகுதியின் அ.தி.மு.க உறுப்பினர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் இந்த மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது. இதில் அ.தி.மு.க வேட்பாளராக ஜெயலலிதா போட்டிதிடுகிறார் இவரது வெற்றி இங்கு நிச்சயம் என்பதை உணர்ந்துகொண்ட கருணாநிதியின் தி.மு.க. இங்கு போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளது. தமிழ்நாடு சட்டசபைக்கான பொதுத்தேர்தல் அடுத்தாண்டில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# பூச்சி உருண்டைகளைப் பாவிப்பதில் அவதானம் வேண்டும்

அவள் துடித்துப் பதைத்து ஓடிவந்தது நியாயம்தான். ஒரு தாய்க்கு தன் குழந்தையின் உயிர் பற்றிய பயமும் பதகளிப்பும் இல்லாமல் போய்விடுமா. தாயின் பதற்றத்தைப் புரிந்துகொள்ளாமல் சிரித்தபடி நின்றாள் மகள். பிரச்சனையின் ஆழத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் அந்த வயதில் இருக்கப் போவதில்லையே'

பிரச்சனை பூச்சி உருண்டை வடிவில் வந்தது.

பூச்சி உருண்டை எனச் சொல்லப்படும் இவை பளிச்சிடும் வெள்ளை நிற உருண்டைகளாகும். Naphthalene balls, moth balls என்று ஆங்கிலத்தில் அழைக்-கப்படும் இவை பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இனிப்பு வகைகள் போன்ற தோற்றம் கொண்டதால் வாயில் போட்டுவிடலாமா என எண்ணத் தோன்றும்.

மசகு எண்ணெய் மற்றும் நிலக்கரித் தாரிலிருந்து இவற்றைத் தயாரிப்பார்கள். சிகரட் புகையிலும் இது இருக்கிறது. வாகனங்கள் உமிழ்ந்தெறியும் புகையிலும் இருக்கவே செய்கிறது.

பொருட்களையும் உடைகளையும் சேமித்து வைக்கும் அலுமாரி, பெட்டி போன்றவற்றில் பூச்சி கொல்லியான இதைப் போட்டு வைப்பார்கள். பல உணவகங்களிலும் கழிப்பறைகளிலும் வாஷ் பேசினில் போட்டு வைத்திருப்பதையும் காணலாம். இதிலிருந்து எழும் மணமானது கரப்பொத்தான் மற்றும் சிறுபூச்சிகளை வெருட்டி அடிக்கும். மணத்தை எழுப்பும் இவை படிப்படியாகக் காற்றிலேயே கரைந்து அற்றுப் போகும்.

ஏனைய பூச்சி கொல்லிகளைப் போலவே இது மனிதர்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும். பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்படலாம்.

ஆயினும் இதனை தற்செயலாகவோ வேண்டும் என்றோ உட்கொண்டால் பாதிப்பு அதிகமாகும். பாதிப்பின் தீவிரம் உட்கொள்ளப்பட்ட நப்தலீனின் அளவைப் பொறுத்தது ஆகும்.

இரைப்பையை உறுத்துவதால் வயிற்று வலி, ஓங்காளம், வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் ஆரம்பத்தில் ஏற்படும். இவை தானே மாறிவிடக் கூடும்.

ஆயினும் அதிகளவில் உட்கொண்டால் கடுமையான பாதிப்பு ஏற்படும். இதற்குக் காரணம் நப்தலீன் ஆனது குருதியில் உள்ள செங்குருதிக் கலங்களைப் பாதித்து அவற்றைச் சிதைவடைய வைப்பதேயாகும். அதிக இரத்தக் கலங்கள் அழியும்போது ஒரு வகை இரத்தசோகை ஏற்படும். இதை hemolytic anemia என்பார்கள். சிதைந்த இரத்தத்தின் ஹீமகுளோபினானது சிறுநீருடன் வெளியேறும். சிறுநீர் செந்நிறத்தில் வெளியேறும்.

அதிகமாக உட்கொண்டிருந்தால் சிறுநீரகம் ஈரல் போன்ற உள்ளுறுப்புகள் பாதிப்புறும்.

நப்தலீனால் குருதியில் உள்ள இரும்புக் கூறானது ferrous என்பதற்கு பதிலாக ferric ஆக மாறும். இரத்தத்தினால் உடலுக்குத் தேவையான ஒட்சிசனைக் குருதியால் காவிச் செல்ல முடியாது போய்விடும். உடல் நீலம் பாரிக்கும். methemoglobinemia என்ற இது மற்றொரு கடுமையான விளைவாகும். இந் நிலை தொடரும்போது உடலுக்கு வேண்டிய ஒட்சிசன் இல்லாமையால் வலிப்பும் மரணமும் தொடரலாம்.

நப்தலீன் நச்சு பெரியவர்களை விட குழந்தைகளில் பாதிப்பை ஏற்படுத்துவது அதிகம்.

உட்கொள்வதால் மாத்திரம் மட்டுமின்றி, அதன் மணத்தைச் சுவாசிப்பதாலும் குழந்தைகளில் பெரும் பாதிப்பு ஏற்படலாம். நப்தலீனால் மாசடைந்த உடைகள் படுக்கை விரிப்புகள் மற்றும் diapers போன்றவற்றைத் தொடர்ந்து அணியும்போது அதன் நச்சுத்தன்மை சுவாசத்தின் ஊடாக உடலை அடைந்து, இத்தகைய பாதிப்புகளை பாலகர்களில் ஏற்படுத்தி இருப்பதாக சில அறிக்கைகள் கூறுகின்றன.

## ஏனைய பாதிப்புகள்

இதன் மணம் சிலருக்கு கண்களில் எரிவை உண்டாக்கும். கண்ணில் நேரடியாகப் பட்டால் கண்கள் சிவந்து நோய் conjunctivitis ஏற்படலாம். நீண்டகாலமாக தொடர்பு ஏற்படும்போது வெண்புரை எனப்படும் கற்றரக்ட் ஏற்படவும் கூடும். கண்ணில் பட்டால் உடனடியாக கண்களை நீரினால் நன்கு கழுவுங்கள்.

சருமத்தில் படும்போது சருமத்தை சற்று உறுத்தலாம். உடனடியாகக் கழுவிவிடுதல் போதுமானது. தொடர்ச்சியான தொடர்பு கொண்டிருந்தால் ஒவ்வாமை அழற்சியை ஏற்படுத்துவது உண்டு. இதைக் கையாள வேண்டியிருந்தால் வேலை முடிந்ததும் உடனடியாகவே கைகளை நன்கு கழுவுவது முக்கியமானது.

இதன் மணமானது பலரிலும் சுவாசத் தொகுதியில் உடனடிப் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். அதிகளவு எச்சில் சுரப்பது, ஓங்காளம், சத்தி, வயிற்று வலி போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தலாம். சிலரில் மூச்சுத் திணறலையும் ஏற்படுத்த வாய்ப்பு உண்டு.

glucose-6-phosphate dehyrogenase (G6PD) பிரச்சனை உள்ளவர்களில் பாதிப்பு அதிகமாகும்

நப்தலீனானது மிருகங்களில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய காரணிகளில் ஒன்று என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும் மனிதர்களில் இது பற்றிய தெளிவான ஆய்வு அறிக்கைகளைக் காண முடியவில்லை.

அந்த 5 வயதுக் குட்டிப் பெண் 2-3 பூச்சி உருண்டைகளை முதல் நாள் இரவு சாப்பிட்டுவிட்டாளாம். பரிசோதித்துப் பார்த்தபோது குழந்தையின் உடலில் எந்தவித பாதிப்புகளும் தெரியவில்லை. காலையில் சிறுநீர் சற்று இரத்தக் கலரில் போனது என அம்மா கூறினாள்.

உடனடியாகவே சிறுநீரைப் பரிசோதித்தபோது அதில் மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. இருந்தபோதும் இரண்டு நாட்களுக்கு அவதானிப்பில் வைத்திருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

குழந்தைகள் தவறுதலாக உட்கொள்வதை அறிவோம்.

அதேபோல விளையாட்டாக அவற்றை மூக்கினுள் அல்லது காதினுள் செலுத்தி விடுவதும் உண்டு. அவ்வாறு நடந்தால் நீங்களாக அதை எடுக்க முயலவேண்டாம். மூக்கினுள் கிடப்பதை எடுக்க முயலும்போது அது பிற்புறமாக விழுந்தால் சுவாசக் குழாயினுள் வீழ்ந்து மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் பாரிய ஆபத்து உள்ளது

(28ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# குரங்குகள் ராச்சியம்

இலங்கையிலே பொலநறுவைக் காட்டில் குரங்குகள் பற்றி ஒரு ஜேர்மன்காரர் ஆராய்ச்சி செய்கிறார். 40 வருடங்களுக்கு முன்னே போனவர் அங்கேயே தங்கிவிட்டார். ரோக் மக்காக் (Toque Macaque) என்ற வகைக் குரங்குகள் பற்றித்தான் அவருடைய ஆராய்ச்சி. தமிழ் பகுதிகளில் இவை இல்லாததால் அவற்றுக்கு தமிழ் பெயர் இல்லை. சிங்களத்தில் ரிலூவா என்பார்கள். இலங்கையில் மட்டுமே காணப்படும், சில ஆயிரங்கள் எண்ணிக்கை கொண்ட இந்தக் குரங்குவகை அழியும் அபாயத்தில் உள்ளது.

இந்தக் குரங்குகளின் கதையை டிஸ்னி Monkey Kingdom என்ற பெயரில் திரைப் படமாக எடுத்து ஏப்ரல் 22 பூமிதினம் அன்று உலகம் பூராவும் வெளியிடுகிறது. ஒரு புது வகையான திரைப்படம் இது. ஆவணம் இல்லை; புனைவும் இல்லை; இரண்டும் கலந்தது. 'ஆவணப் புனைவு' என்று சொல்லலாம். டிஸ்னியின் லயன் கிங் போல மிருகங்கள் இதில் பேசாது; பிளானெட் ஏர்த் போல முழுக்க முழுக்க ஆவணமாகவும் இல்லை. குரங்குகளின் இயற்கை வாழ்க்கையை ஒரு சுவையான கதையாகச் சொல்வது.

இதன் பின்னணி விசித்திரமானது. இரண்டு வருடங்களுக்கு மேலாக குரங்குகளின் வாழ்க்கையை காமிரா படம் பிடித்தது. பின்னர் அந்தக் காட்சிகளை சுருக்கி திரைக்கதையாக உருவாக்கியிருக்கிறது. கதைப்பிரதியை எழுதி வைத்துக்கொண்டு படத்தை தொடங்கவில்லை. காட்சிகள் வளர வளர கதையும் மாற்றமடைந்தது. நட்சத்திரக் கூட்டத்தை நுட்பமாக அவதானித்து சிலதை தேர்ந்தெடுத்து ஒட்டகம் வரைவது போலத்தான் அத்தனை தரவுகளிலிருந்தும் ஒரு கதையை உண்டாக்குவது.

'குரங்குகள் ராச்சியம்' கதைச் சுருக்கம் இதுதான். ரிலூவா குரங்குகள் அழகானவை. நெற்றியிலே சுருளாக மயிர் புரண்டிருக்கும். உயரக் கொப்புகளில் இருக்கும் குரங்குகள் கீழ் கொப்பு குரங்குகளை அதிகாரம் செய்யும். உயரத்தில் ராஜாவும் மூன்று காதலிகளும். கீழ்க்கொப்பில் அன்றாட பிரச்சினைகளுடன் பயந்து ஒடுங்கி வாழும் மாயா என்னும் குரங்குதான் கதாநாயகி. அதற்குப் பிறக்கும் குழந்தையை தந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வளர்த்தெடுப்பதற்கு அது படும்பாடுதான் கதை. உணவு தேடுவது, உயர்குடிகளை சமாளிப்பது, எதிரிகளிடமிருந்து தப்புவது, உயிர் தரிப்பது, இதுதான் சவால். ஒருநாள் எதிரிக்கூட்டம் அவற்றின் வாழ்விடத்தை பிடுங்கிவிட, மாயா தன் குழுவுடனும் குட்டியுடனும் பக்கத்து கிராமத்துக்கு தப்புகிறது. அங்கே அவை செய்யும் சேட்டைகளும் தந்திரங்களும் சுவாரஸ்யமாகக் காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

இந்தப் படத்தை இயக்கிய மார்க் லின்ஃபீல்டு பல இயற்கை படங்களை எடுத்தவர். இவருடைய Planet Earth திரைப்படம் உயரிய எமி விருது பெற்றது. இவரிடம் சில கேள்விகள் கேட்டேன்.

உங்களுக்கு எப்போது திலூவா குரங்குகளை வைத்து திரைப்படம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது?

சொன்னால் நம்ப மாட்டீர்கள். 18 வருடங்களுக்கு முன்னர் நான் இலங்கைக்கு சென்றிருந்தேன். அப்போது ஜேர்மன் பேராசிரியர் வூல்ஃப் டிற்றஸ் குரங்குகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவர் அவதானித்த ஒரு விசயம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. ரிலூவா குரங்குகளில் இருந்த சமுதாய அமைப்பு. உயர்குடி குரங்குகள் மரத்தின் உச்சியில் நல்ல கனிகளை உண்டு, சொகுசு வாழ்க்கை வாழ்ந்தன. கீழ்க்கொப்புக் குரங்குகள் அவைக்கு அடிபணிந்தன. அவலமும் அச்சமும் நிரம்பிய வாழ்க்கை. தினம் உயிர் வாழ அவை போராட வேண்டும். இது எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. மிருகங்களில் இப்படி கீழ் வகுப்பு, மேல் வகுப்பு பிரிவு இருப்பதை எப்படியாவது பதிவு செய்யவேண்டும் என நினைத்தேன். அது கைகூட 18 வருடங்கள் எடுத்தன.



வூல்ஃப் டிற்றஸ் உடைய ஆராய்ச்சி உங்களுக்கு பயன்பட்டதா?

அதுதானே ஆரம்பம். 40 வருடங்கள் அவர் இந்தக் குரங்குகளை ஆராய்ச்சி செய்தவர். இலங்கையில் மட்டுமே வாழும் அரிதான உயர்பால்குடிகள் (Primates) அவை. உலகில் வேறு எங்கேயுமே காணமுடியாது. அவை அழிவின் விளிம்பில் இருந்தன. அவற்றின் வாழ்க்கையை சொன்னால், அழிவின் எல்லையை தொடும் மற்றைய மிருகங்களின் வாழ்கையையும் சொன்னது போலத்தான். வூல்ஃபின் ஆலோசனைகள் படம் பிடிப்பதில் உதவியாக இருந்தன. குரங்குகள் செயலாற்றும் முறை, அவற்றின் உணவு, இருப்பிடம் ஆகியவற்றை அவர் அறிந்து வைத்திருந்தார். அவை அடுத்து எங்கே போகும், என்ன செய்யும் என்பது அவருக்கு தெரியும். நாங்கள் அங்கே காமிராவை தயாராக வைத்திருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த திரைப்படத்தை எடுக்கும்போது உங்களுக்கு அலுப்புத் தரக்கூடிய, வெறுப்பேற்றும் சம்பவங்கள் ஏதாவது நடந்தனவா?

நிறைய. ஏறக்குறைய இரண்டரை வருட காலம் இடைவெளி இல்லாமல் ஒவ்வொரு நாளும் ஒரே காட்டில், ஒரே வகையான குரங்குகளைப் படம் பிடித்தோம். சில நாட்களில் ஒன்றுமே நடக்காது. விரயமாகிவிடும். அவை வெறுப்பேற்றும். விளையாடும், மரக்கிளைகளில் தொங்கும், பேன் பார்க்கும். இதை எத்தனை தடவை படம் பிடிக்கலாம். புதிதாக ஏதாவது நடக்கிறதா என்று ஏக்கத்துடன் காத்திருப்போம். பலநாட்கள் இப்படித்தான் ஒன்றுக்கும் உதவாமல் முடிந்தன.

1000 நாட்கள் படம் பிடித்ததாகச் சொல்கிறீர்கள். எப்பொழுது படம் பிடிப்பதை நிறுத்தலாம் என்ற எண்ணம் வந்தது? இத்தனை காலமும் பிடித்தது போதும் என்று தோன்றியதாலா?

நிறுத்தவே தோன்றாது. ஒவ்வொரு நாளும் நிறுத்திவிட முடிவு செய்வேன். ஆனால் அடுத்தநாள் புதிதாக ஏதாவது நடந்துவிட்டால் அது கதையின் போக்கை திருப்பிவிடுமே. தினம் காலை வேளை பெரும் எதிர்பார்ப்போடுதான் தொடங்கும். எண்ணெய் கிணறு தோண்டுபவர்களுடைய நிலைதான். 5,000 அடி தோண்டிய பின்னர் அவர்கள் போதும் என்று நிறுத்தக்கூடும். மேலும் ஓர் அடி தோண்டினால் எண்ணெய் குகுகுபுவென்று பெருக்கெடுக்கலாம். அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று தெரியாமல் காத்திருந்த மணித்தியாலங்கள் வேதனையானவை.

குரங்குகள் கிராமத்துக்குள் புகுந்து அட்டூழியம் செய்யும் காட்சி சிறப்பாகப் படமாக்கப்பட்டிருந்தது. இது எப்படி சாத்தியமானது? காமிராவை ஆயத்த நிலையில் வைத்திருந்தீர்களா?

அனுபவம்தான் காரணம். ஒன்றுகூட பழக்கப்பட்ட குரங்கு கிடையாது. எல்லாக் காட்சிகளுமே இயற்கையாக நடந்ததை படம் பிடித்ததுதான். அந்தச் சிறுவனின் பிறந்த நாள் விழாவின்போது குரங்குக் கூட்டம் தாக்கும் என்ற ஊகம் இருந்தது. அப்படி அவை முன்னர் செய்திருக்கின்றன. நாங்கள் செய்ததெல்லாம் குரங்குகளை பழக்காமல் மனிதர்களை பழக்கியதுதான். பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்தபோது எதிர்பார்த்தபடி குரங்குகள் படையெடுத்தன. சோடனையை சின்னாபின்னமாக்கின. பிறந்தநாள் கேக்கை திருடின. உணவுப் பண்டங்களை உருட்டி உருட்டி கூத்தடித்தன. பெரியவர்களும் சிறுவர்களும் எதிர்ப்புக் காட்டாமல் ஓடி ஒளிந்ததால்தான் காட்சியை தொடர்ந்து படமாக்க முடிந்தது. எல்லாம் முடிந்த பின்னர் சிறுவனுக்கு வேறு கேக் வாங்கி பரிசளித்து, சேதத்தையும் சரிக்கட்டினோம். காட்சி சிறப்பாக அமைந்தது அப்படித்தான்.

இந்தப் படத்தை எடுக்கும்போது நடந்த ஏதாவது மறக்க முடியாத தருணத்தைப் பற்றி கூறமுடியுமா? 20 வருடத்திற்கு பின்னரும் உங்களின் நினைவிலிருந்து அழிய மறுக்கும் ஒரு சம்பவம்.

ஒன்றல்ல, இரண்டைச் சொல்லலாம். ரிலூவா கூட்டம் வேறு வகை குரங்குகள் செய்யாத ஒரு காரியத்தை செய்தது. தண்ணீருக்குள் குதித்து ஆழத்தில் நீந்திப்போய் தண்ணீர் கொடிக் கிழங்குகளை பறித்து வந்து உண்டன. ஒரு நிமிடத்துக்கு மேலாக அவை மூச்சை பிடித்து நீந்திக் - கொண்டு கிழங்குகளைத் தேடும். தண்ணீருக்கு அடியில் அதை படம் பிடிக்கவேண்டும் என்பது என் ஆசை. ஸ்கூபா உடையணிந்து தண்ணீரின் ஆழத்தில் காமிராவுடன் காத்திருந்தேன். குரங்குகள் தண்ணீர் ஆழத்தில் கிழங்குகளைப் பறித்தபோது அவற்றை படம் பிடிக்கமுடிந்தது. படத்திலே இந்தக் காட்சி வரும் இடம் உன்னதமாக இருக்கும். வேறு எங்கேயும் காணமுடியாத காட்சி.

இன்னொன்றும் தண்ணீர் சம்பந்தப்பட்டது. குரங்குகள் மரத்தின் உச்சிக்கு ஏறி அங்கேயிருந்து தண்ணீருக்குள் பாயும். பின்னர் மறுபடியும் மரத்தின் நுனிக்குப் போய் ஆடிக்கொண்டே குதிக்கும். இப்படி பலமுறை செய்தன. அப்படி குதிப்பது அவைக்கு மகிழ்ச்சியான விளையாட்டு. சிறுவர் சிறுமிகள் தண்ணீரில் திரும்பத் திரும்ப வேடிக்கையாக குதித்து களிப்பதுபோல அவை துள்ளி ஆரவாரித்து மகிழ்ந்த காட்சி என்றைக்கும் மறக்கமுடியாதது.

உங்களுக்கு திருப்தியா?

1000 நாட்களை சுருக்கி 81 மணிநேர திரைப்படமாகத் தந்திருக்கிறோம். இயற்கை அழகையும் அழிவையும் ஒரே சமயத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கும். குரங்குகளின் வாழ்க்கை பாசமும் நேசமும் நிறைந்தது. அவை அநேக பிரச்சினைகளை தினசரி புத்திசாலித்தனமாக கடந்தன. அழிவை எதிர்நோக்கும் உயிரினங்களை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணருவார்கள் என்பது நம்பிக்கை. இந்த நம்பிக்கையில்தான் டிஸ்னி திரைப்படத்தின் வருமானத்தில் ஒரு பகுதியை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு வழங்குகிறது.

தொலைபேசியில் மார்க் அழைத்து கேள்விகளுக்கு பதில் தந்தார். இரண்டு மணி நேரம் தாமதமாகியதற்கு மன்னிப்புக் கேட்டார். அவருடைய மனைவியை ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்துவிட்டு அங்கேயிருந்து என்னை அழைத்திருந்தார். அவருடைய இயற்கை நேசமும், அர்ப்பணிப்பும், சுற்றுச்சூழல் அக்கறையும் என்னை நெகிழவைத்தன.

வனத்துக்குள் புதைந்து கிடந்த புராதனக் கட்டிடங்கள்தான் மாயா கூட்டத்தினரின் வாழ்விடம். புதுக் குரங்குக் கூட்டம் அந்த இடத்தை ஆக்கிரமித்து மாயா குழுவை துரத்திவிடுகிறது. இழந்த நிலத்தை போராடி மீண்டும் கைப்பற்றுவதுதான் கதை. டிஸ்னி வேறு எதையோ சொல்ல வருகிறது போலவும் படுகிறது.●

---

கலைத்திட்டம் சம்பந்தமான பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர்களை அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

இன்றைய பெற்றோர்களுக்கு இந்நாட்டு விழுமியங்கள் பற்றிய போதிய அறிவு உண்டு. இங்கு வாழும் திறன்களை (life skills) வழங்குவதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். பிரத்தியேக வகுப்புகள் என்ற வியூகத்துள் பல பெற்றோர் அகப்பட்டு வெளிவரத் தெரியாமல் அல்லற்படுகிறார்கள். பிள்ளைகளையும் அநாவசியமாகக் கஷ்டப்படுத்துகிறார்கள். பெற்றோர்களே இன்றைய அபிமன்யுகள்!●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# இன்றைய அபிமன்யுகள் பெற்றோர்களா? பிள்ளைகளா?

அன்று ஒருநாள் ராக்ஸி ஒன்றில் பயணம் செய்தேன். அதன் சாரதி 35 ஙி 40 வயது மதிக்கத்தக்க தமிழர். பொதுவாக தமிழ்ப் பிள்ளைகள் சாரதியாக இருந்தால் நானே கதைக்கத் தொடங்கி விடுவேன். அவர் தனக்குப் பத்து வயதில் ஒரு மகன் இருப்பதாகவும், விளையாட்டு படிப்பு சங்கீதம் எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்பதாகவும் பெருமையுடன் கூறினார். கேட்பதற்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. கிழமை நாட்களில் மாத்திரமல்லாது வார இறுதி நாட்களிலும் ஏதோ ஒரு பிரத்தியேக வகுப்பு மகனுக்கு இருப்பதாகக் கூறினார். கால் பந்துப் பயிற்சி, கராத்தே, வரைதல், வாய்ப்பாட்டு, மிருதங்கம், தமிழ், சமயம் என்று அந்தப் பத்து வயதுப் பாலகனுக்கு ஓய்வில்லைப் போல இருந்தது.

இந்த வகுப்புகளுக்கெல்லாம் கூட்டிச் செல்வதற்காக தனது மனைவிக்குக் கார் வாங்கிக் கொடுத்திருப்பதாகவும் கூறினார். தனது இளமைப் பருவத்தில் வீட்டின் பொருளாதார நிலைமை காரணமாக ஊரில் இருந்த கிராமப் பாடசாலைக்குக்கூட ஒழுங்காக தம்மால் போக முடியாதிருந்ததையும் அவர் சொன்னார். இந்த அநியாயம் தனது பிள்ளைக்கு இந்த நாட்டில் நடக்கக்கூடாது என்பதற்காக இரவு பகலாக தாம் ராக்சி ஓடுவதையும் விபரித்த அவர், "நான் சொல்வது சரிதானே?" என சர்ச்சைக்குரிய வினாவையும் என்னைப் பார்த்துக் கேட்டார். தனது நிறைவேறாத கனவுகளை தன் பிள்ளைக்குத் திணிக்கும் அந்த அப்பாவித் தந்தையைப் பார்த்து, அவர் செய்வது சரியில்லையென்று நான் சொன்னாலும் அவர் ஏற்றுக் கொள்வாரா?

எமது இரண்டாம் தலைமுறையினர் இன்று பெற்றோர்களாக மாறியுள்ளனர். இவர்கள் கல்வித் தராதரத்திலும் பொருளாதார ரீதியிலும் மிகவும் உயர் நிலையில் காணப்படுகிறார்கள். இந்த நாட்டு விழுமியங்கள் பற்றிய போதிய அறிவு இவர்களுக்கு உண்டு. ஆயினும் மேற்கூறிய தந்தைக்கும் இவர்களுக்குமிடையில் பெரிய வேறுபாடு காணப்படவில்லை.

பாடசாலையில் கனடிய மாணவர்களுக்கீடாக தமது பிள்ளைகள் விளங்க வேண்டுமென்பதே இவர்கள் நோக்கம். மேற்கத்திய நடன வகுப்புகள், பியானோ இசைக் கருவிகள், பனிச்சறுக்கு வகுப்புகள், ஹொக்கி வகுப்புகள், பொதுமேடைகளில் பேசும் திறனை வளர்க்கும் வகுப்புகள், நீச்சல், ஸ்பானிய ஜேர்மன் மொழிக் கற்கை வகுப்புகள் (தமிழ் வகுப்புகளுக்கு இவர்கள் செல்வதில்லை) மற்றும் இன்னோரன்ன அதிக கட்டணம் வசூலிக்கும் பிரத்தியேக வகுப்புகளுக்கு பிள்ளைகளைக் கூட்டிச் செல்கிறார்கள். இந்தப் பெற்றோர்களின் ஓட்டம் (Rat Race) வகுப்புகளுக்குக் கூட்டிச் செல்வதோடு முடிவதில்லை. இருக்கவே இருக்கின்றன இந்த வகுப்புகளோடு சம்பந்தப்பட்ட மேடை நிகழ்ச்சிகளும். போட்டிகளும். ஏன் இந்த அவலம்?

இங்கு எமது பிள்ளைகளின் நடன மற்றும் சங்கீத அரங்கேற்றங்களுக்குச் செல்கிறோம். அரங்கேற்றம் செய்யும் பிள்ளையின் சுயவிபரக் கொத்தை நிகழ்ச்சி நிரலோடு வழங்குகிறார்கள். அதிகமான பிள்ளைகள் தாங்கள் அரங்கேற்றம் செய்யும் கலைத்திறனோடு பாடசாலையிலும் செஸ், கணித விஞ்ஞானப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் இப்படி எத்தனையோ விதமான நிரல்களில் திறம்படச் செயலாற்றுவதைக் காண்கிறோம். ஒரு பதின்ம வயதுப் பிள்ளையால் அரங்கேற்றம் செய்யும் திறனை பூரணமாகக் கற்றுத் தேறுவது சுலபமான விடயமல்ல. இதற்குப் பின்னால் எவ்வளவு மணித்தியாலக் கடின உழைப்பு, அயராத முயற்சி, தன்னம்பிக்கை, மனத்திடம், அர்ப்பணிப்பு ஆகியவை அமைந்திருக்க வேண்டும். பிள்ளைகளால் பல விடயங்களை ஒரே நேரத்தில் கையாள முடியும்.

இன்று எமது சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் மருத்துவம், பொறியியல், கணக்கியல், அரசியல் போன்ற பல நிரல்களில் பல்கலைக்கழகங்களிலும் தொழிற்துறைகளிலும் முன்னணியில் நிற்கின்றனர். இது பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கும் விடயம். இவற்றையெல்லாம் இவர்கள் சுலபமாகப் பெறவில்லை. எவ்வளவோ மணித்தியாலக் கடின உழைப்பு, தொண்டர் சேவை, தளராத முயற்சி, அர்ப்பணிப்பு ஆகியவை நிரம்ப அடங்கியுள்ளன.

இவற்றையெல்லாம் சில பிள்ளைகளால் எவ்வாறு செய்ய முடிகிறது என ஆராய்ந்தால், எல்லா பிள்ளைகளும் ஒரே மாதிரி இல்லை என்பதை பெற்றோர் உணரலாம். ஒரு சில பிள்ளைகளால் மட்டுமே பல விடயங்களை சமவேளையில் கையாள முடியும். அவர்களாகவே அவற்றைச் செய்வதால் அது அவர்களுக்கு மனஅழுத்தத்தைக் கொடுப்பதற்கு மாறாக ஒரு வகைத் திருப்தியை அளிக்கிறது. பெற்றோர் முதலில் தங்கள் பிள்ளைகளால் என்னென்ன திறன்களைக் கையாள முடியும் என்பதை உணர வேண்டும். சில சமயங்களில் திறன் இருந்தாலும் சில பிள்ளைகளுக்கு அவற்றில் ஈடுபாடு ஏற்படுவது இல்லை. இவற்றுக்கெல்லாம் ஓர் இடைவெளியை (allowance) பெற்றோர் அமைத்துக் கொடுக்க வேண்டும். தங்கள் பிள்ளையை வேறு பிள்ளைகளோடு ஒப்பிடும் பழக்கத்தைக் கைவிட வேண்டும்.

இந்த மாத இறுதியில் கோடை விடுமுறை ஆரம்பமாகப் போகிறது. முழுதாக இரண்டு மாதங்கள் விடுமுறை. அத்துடன் பகற்பொழுது கிட்டத்தட்ட 15 மணித்தியாலங்கள். எவ்வாறு பிள்ளைகளைத் தாக்காட்டப் போகிறோம் என்று பெற்றோர் அங்கலாய்க்கத் தொடங்கி விட்டனர். பலவிதமான பிரத்தியேக வகுப்புகளுக்கான விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கி விட்டன. எந்த வகுப்புகளுக்குப் போவதால் பிள்ளைகள் பயனடைவார்கள் என்பதிலும் பார்க்க அவர்களை அழைத்துப் போக தமக்கு வசதியாக இருக்கும் வகுப்புகளையே பெற்றோர் கருத்தில் கொள்கிறார்கள்.

இங்கு வகுப்பில் நடைபெறும் ஆசிரியரின் கற்பித்தலை அவதானமாகக் கேட்டாலே போதுமானதாக உள்ளது. அதிலும் கற்பித்தலும் மதிப்பீடுகளும் அக வயமானது. ஒவ்வோர் ஆசிரியரும் தமது கற்பித்தல் பணிக்கு ஏற்றதாகவே வகுப்பில் கற்றலை நடத்துகின்றனர். ஆகவே விடுமுறை காலத்தில்

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# தண்டனைகள் பலவிதம்

பல காலம் வந்து போன ஒருவரை இருந்தாற் போல காணாவிடின் என்ன ஆச்சு என்ற கேள்வி உள்ளத்துள் உறுத்துவது இயல்பு. அதிலும் அவர் தண்டனைக்கு உள்ளானார் என செவிகளில் படின் மீண்டும் அதே என்ன ஆச்சு விஸ்வரூபம் எடுக்கும். இந்த என்ன ஆச்சு, குற்றம் பற்றி ஆராயும். தப்புச் செய்தவர்களைத் திருத்துவதையும் தப்பாகச் செய்யலாமா என வாதிடும். 'குற்றங்கள் அனைத்துக்கும் தண்டனைதான் தீர்ப்பாகாது. பல வேளைகளில் மன்னிப்பும் நியாயமாகும்'என ஆளாளுக்கு தீர்ப்பு வழங்கும். ஆலமரமும் செம்பும் இல்லாமலே நாட்டாமை காட்டும். இதனை நாடும் கண்டது. வீடும் கண்டது. ஏடும் கண்டது. பிரிய மனம் இல்லாமல் பிரிந்தார் என்றோ வில்லங்கமாகவே விலகினார் என்றோ எந்தப் பஞ்சாயத்து சொல்லப் போகின்றது.

தப்பு செய்யும் பொழுது தட்டிக்கேட்கும் துப்பில்லாது வாளாயிருந்தவர்கள் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் துள்ளி எழுந்து குய்யோமுறையோ என ஆர்ப்பரித்த விசித்திரத்தை அண்மையில் போதைவஸ்து கடத்தலுக்காக மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பொழுது உலகம் கண்டது. இந்தோனேஷியாவில் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 14 பேர் இதே குற்றத்துக்காக நீண்ட கால சிறை வாசத்தின் பின் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கேட்க நாதியில்லை.

சீனா, ஈரான், சவூதி அரேபியா, வியட்நாம், மலேஷியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய ஏழு நாடுகளும் போதைவஸ்து கடத்தலுக்கு மரண தண்டனையை தீவிரமாக அமுல்படுத்துகின்றன. தூக்கிடல் (Hanging), மின்னூட்டல் (Electrocution ), சுடப்படல் (Firing Squard), எரிவாயூட்டல் (Lethal Gas), விஷவூசி ஏற்றுதல் (Lethal injection) போன்றவற்றுள் ஏதாவதென்றின் மூலம் இந்த நாடுகளில் குற்றவாளி உயிர் துறப்பார். இவற்றைவிட அமெரிக்காவின் சில மாநிலங்கள், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட இதர 25 நாடுகளில் பெயரளவில் மட்டுமே மரண தண்டனை உள்ளது.

கனடா உட்பட உலகில் 120 நாடுகளில் எந்தவொரு குற்றவாளிக்கும் மரண தண்டனை வழங்கப்படுவதில்லை.1976 ம் ஆண்டு மரண தண்டனையை கனடா சட்ட பூர்வமாக ரத்துச் செய்வதற்கு முன்பாக 1759 ம் ஆண்டுக்கும் 1976 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 1481 பேர் மரண தண்டனை பெற்றிருந்த போதும் 710 பேர் தூக்கிலிடப்பட ஏனையோர் ஆயுட்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். கனடாவில் குற்றவாளி தூக்கிலிடப்பட்ட இறுதி தினம் என 1962 டிசம்பர் 11 திகதி பதிவாகியுள்ளது.

உலகெங்கும் கொலைக்கு மரண தண்டனை வழங்குவது ஏதாவது ஒரு காலத்தில் நிலவியுள்ளது. உலக நாடுகள் பல மரண தண்டனையை Death penalty என்றும் கனடா அமெரிக்கா போன்ற சில நாடுகள் Capital punishment என்றும் குறிப்பிடுகின்றன. 2014ம் ஆண்டு அதிர்ச்சி அளிக்கக் கூடிய வகையில் மரண தண்டனையின் விகிதாசாரம் உலகம் பூராவும் அதிகரித்துள்ளது. தலையை வாளினால் சீவுதல் அல்லது வேறு வகையில் துண்டித்தல், கல்லில் கட்டி கடலில் எறிதல், கழுத்து வரை நிலத்துள் புதைத்து யானையால் மிதிக்கச் செய்தல், காட்டு விலங்குகளுக்கு இரையாக்கல், உயிருடன் புதைத்தல், கொதி கலன்களுள் தள்ளி வேகவிடல் என பல சித்திரவதைகளை உலகம் வழக்கொழித்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக விதவிதமான தண்டனைகளை தேடிக் கண்டுபிடித்துக் கொடுக்கும் நாடு சீனா. விரலை முறிப்பதிலிருந்து கழுத்தைச் சீவுவது வரை சகல வதைகளுக்கும் சீனர்கள் இயந்திரங்களை வடிவமைத்துள்ளனர். தேசத் துரோகம் அல்லது பெற்றோரை கொலை செய்தல் போன்றவற்றுக்கு கொடூரமான தண்டனை வழங்கிய நாடு சீனா. குற்றவாளியை கட்டி வைத்து ஆங்காங்கே தோலை உரிப்பார்கள் அல்லது சதையை அறுப்பார்கள். சுய நினைவை இழந்தால் வலி தெரியாதே' அதனால் நினைவை இழக்காதிருக்க மருந்து கொடுப்பார்கள். கண் காது மூக்கு நாக்கு உதடு என ஒவ்வோர் உறுப்பாக எடுப்பார்கள். குற்றவாளி உயிரைவிட மூன்று நாட்கள் ஆகும். முதலாவது நாளே உறவினர்கள் லஞ்சம் கொடுத்தால்..... உடனே குற்றவாளியின் தொண்டையை அறுத்து கொல்வார்கள். அடடா.. என்னே கருணை' அரபு நாடுகளில் பொது மக்கள் குற்றவாளி மீது கல்லால் எறிந்து கொல்லும் வழமை உள்ளது. தபதபவென்று விழும் கற்களால் மண்டை உடைபடும். ரத்தம் கொட்டி மரணம் சம்பவிக்கும். இது வாடிக்கையின் வேடிக்கை. இந்தியர்களின் பழைய வரலாறு கழு ஏறியது. கழு என்பது தேங்காய் உரிக்கும் கடற்பாரை போன்றது. தண்டனை பெற்றவர் அதன் மீது அமர ஆசனவாயில் வழியாக கழு உடலை கிழிக்க உயிர் அணு அணுவாக பிரியும். ஆயிரக் கணக்கானவர்களை கழுவேற்ற நேரிடின் மூங்கிலை தரையில் ஊன்றி கழு உருவாக்குவார்கள். இதேமுறைதான் பின்னர் சிலுவையாக உருமாறியதாக ஆய்வாளர்கள் சொல்வார்கள்.

விலங்குகளுக்கு தண்டனை விதித்த விபரீதம் தெரியுமா? லண்டனில் பக்கத்து வீட்டு கோழியை நாய் தின்று தீர்த்தது.கோழி உரிமையாளரின் முறைப்பாட்டில் மூன்று வேளையும் சைவ உணவை வழங்குமாறு பணித்தது விலங்குகள் காப்பகம். நாய் உரிமையாளர் தொடந்த வழக்கில் மூன்று மாத இழுத்தடிப்புக்குப்பின் இதெல்லாம் ஒரு வழக்கா என முடித்தார் நீதிபதி' அந்த நாய் 10 கிலோவிலிருந்து ஆறு கிலோவாக எடை குறைந்ததுதான் மிச்சம்.


எழுத்தில் என்னதான் எழுதப்பட்டிருந்தாலும் தண்டனை எப்பொழுதும் பலவீனமானவர்களுக்கும் ஏழைகளுக்கும் சிறுபான்மையினருக்கும் எதிராகத்தான் பயன்படுகின்றது என்றார் கனடாவின் முன்னாள் ஆளுனர் ஒருவர்.

விரைவாகவே நம்மைக் கொன்று தொலைக்க மாட்டார்களா என சித்திரவதைக்கு உட்பட்டோர் ஏங்கித் தவிக்க ஜூன் 26ம் திகதியை சித்திரவதைக்குள்ளானோருக்கான சர்வதேச ஆதரவு நாளாக வழமைபோல் அனுஷ்டிக்கின்றது ஐ. நா. சபை.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொன்னையா விவேகானந்தன்



# சிறந்த ஆசிரியருக்கான பண்புகள்

04

ஒவ்வொரு தலைமுறையையும் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடத்தே உள்ளது. ஆசிரியர்களினது பொறுப்பு மிக்க வழிகாட்டலே அடுத்த தலைமுறைக்கான தலைவர்களையும் துறைசார் வல்லுனர்களையும் உருவாக்குகின்றது. எனவேதான் அரசும் கல்வியியல் மையங்களும் காலந்தோறும் தொழில்முறை ஆசிரியரது தகுதிகளையும் பொறுப்புகளையும் மீளாய்வு செய்து புதிய வரையறைகளை வெளியிடுகின்றன.




ஆசிரியப்பணி பற்றிய கோட்பாடுகள் பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைப் போன்று இப்போது இல்லை. இப்போதிருக்கும் கோட்பாடுகள் அடுத்த பத்தாண்டுகளுக்குப் பின் இருக்கும் எனக் கருத முடியாது. எதிர்கொள்ளும் சிக்கல்களும் புதிய ஆய்வுகளும் மாற்றம் பெறும் தேவைகளும் காலந்தோறும் கோட்பாடுகளை மாற்றிய வண்ணமே உள்ளன.

புகழ்பெற்ற கல்வியியல் நிபுணர் பலர் ஆய்வுகளின் வழியே ஆசிரியருக்கான பண்புகள் பலவற்றை வரையறுத்து வெளியிட்டுள்ளனர்.

Dr. Maria Orlando என்ற அமெரிக்கக் கல்வியியல் பேராசிரியர் சிறந்த துறைசார் ஆசிரியருக்கான ஒன்பது பண்புகளைத் தன் கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கின்றார்.

## அவற்றை நோக்குவோம்.

1. சிறந்த ஆசிரியர் மாணவரை மதிப்பவராக இருப்பார்.

ஒரு சிறந்த ஆசிரியரது வகுப்பறையானது எப்போதும் மாணவர்களது உணர்வுகளுக்கும் கருத்துகளுக்கும் மதிப்பளித்து அவற்றுக்கு பெறுமானம் வழங்குவதாக இருக்கும். மாணவருக்கு மதிப்பளிக்கும் ஆசிரியரிடத்தேதான் மாணவர் தம் உணர்வுகளைப் பாதுகாப்போடும் சுதந்திரத்தோடும் வெளிப்படுத்துவர். இச் சூழலே மாணவருக்குப் பிறரை மதிக்கவும் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் கற்றுக்கொடுக்கும். கற்றல் உணர்வைத் தூண்டவல்ல இதமான வகுப்பறைச் சூழலை (worm welcoming learning environment) ஆசிரியர் உருவாக்க வேண்டும். மாணவருக்கான மதிப்பை வழங்கும் ஆசிரியராலேயே இச் சூழலைத் தோற்றுவிக்க முடியும்.

2. சிறந்த ஆசிரியர் சமூக தன்மை மிக்க உணர்வினையும் இணைப்பினையும் உருவாக்குவார்.

மாணவர்களுக்கிடையேயும் மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையேயும் உருவாகும் மதிக்கும் இயல்புடைய இணைப்பானது கற்றல் செயற்பாட்டுக்கு ஆதரவான கூட்டுச் சூழலை உருவாக்கும். ஆசிரியரால் உருவாக்கப்படும் இந்தச் சிறிய வகுப்பறைச் சமூகம் விதிகளைப் பின்பற்றவும் வேலைகளைச் சிறப்பாக முடிக்கவும் உதவும். கற்றற் செயற்பாடானது ஆசிரியரை மட்டுமே மையப்படுத்தியதாக இல்லாமல் மொத்த வகுப்பறையையும் சார்ந்ததாக அமைய வேண்டும்.

3. சிறந்த ஆசிரியர் இதமானவராகவும் எளிதில் அணுகவல்லவராகவும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவராகவும் இருப்பார்.

வகுப்பறையில் உள்ள மாணவர் மட்டுமல்ல, பாடசாலையில் உள்ள அனைவருமே எளிதில் அணுக வல்லவராகவும் மாணவர் தமது சிக்கல்களையும் கருத்துகளையும் நகைச்சுவைகளையும் கூடப் பகிர்ந்துகொள்ளக் கூடியவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும். மாணவரது கருத்துகளைப் பொறுமையோடு செவிமடுக்கும் திறனும் வேலைப்பளு நிறைந்த பொழுதுகளிலும் கூட மாணவருக்காக நேரம் ஒதுக்குகின்ற மனப்பாங்கும் ஆசிரியருக்கிருத்தல் வேண்டும்.

ஆசிரியருக்கு மன அழுத்தங்களும் பிற குழப்பங்களும் இருக்கலாம். அவை எல்லாவற்றையும் பாடசாலைக் கதவுக்கு வெளியே விட்டுவிட வேண்டும்.

4. அனைத்து மாணவருக்குமான அதிகபட்ச எதிர்பார்ப்புகளைத் திட்டமிடுபவராக இருப்பார்.

அனைத்து மாணவர் மீதும் ஓரே மாதிரியான எதிர்பார்ப்புகளைக் (expectations) கொண்டிருக்க முடியாது. மாணவரது திறனுக்கு மேலான எதிர்பார்ப்புகள் அவர்களது அடைவைப் (achievement) பாதித்துவிடும். மாணவரது ஆற்றலின் அளவைக் கண்டறிந்து அதற்கேற்ப உச்ச எதிர்பார்ப்பைத் திட்மிட்டு நிறைவான அடைவை மாணவர் பெறுவதற்குச் சிறந்த ஆசிரியர் உதவுவார்.

5. சிறந்த ஆசிரியர் கற்றுக்கொள்வதில் எப்போதும் ஆர்வமுடையவராக இருப்பார்.

கல்வி மீது ஆசிரியர் கொண்டிருக்கும் பேரார்வமும் கற்பித்தல் சாதனங்கள் மீது கொண்டிருக்கும் பெரு விருப்பும் மாணவரைப் பெரிதும் கவர்வனவாக இருக்கும். ஆசிரியர் காலந்தோறும் தன் துறைசார் தகமைகளைப் புதுப்பிப்பதோடு துறைசார் தேடலிலும் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். தம்மை மேம்படுத்தும் ஆசிரியரது இவ்வாறான முயற்சிகள் மாணவர் கல்வியில் உயர்தரத்தை எட்ட வழி செய்யும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குரு அரவிந்தன்

# ஔவையார் சிலை

14

தமிழ் இலக்கியத்தில் முக்கிய இடம் பெறும் புலவர்களில் ஔவையாரும் ஒருவர். தமிழரின் புகழை உலகெல்லாம் பரப்பி நிற்பவர்களில் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் போல ஔவையாரும் முக்கியமானவர். இவர் தமிழ் சிறுவர், சிறுமிகளுக்குக்கூட நன்கு அறிமுகமான ஒரு பெண்பாற் புலவராவார். ஔவைப்பாட்டி என்று குழந்தைகள் இவரை பாசத்தோடு சொல்வதுண்டு. இவரது பெருமையைப் பாராட்டி மெரினா கடற்கரையில் இவருக்குச் சிலை அமைத்திருக்கின்றார்கள். இந்தச் சிலை உருவாக்குவதற்கான செலவை சென்னை மாநகராட்சியினர் ஏற்றுக் கொண்டனர். ஔவையாரின் வலது கையிலே ஊன்றுகோலும், இடது கையிலே ஏடும் இருக்கின்றது. பொருளுக்கு ஆசைப்படாதவர் என்பதால், அவரது கழுத்திலே, கையிலே, காதிலே எதுவும் இல்லை. 'சோம்பித் திரியேல்' என்ற அவரது வாக்கியத்தை நிரூபிப்பது போல, இடதுகாலை முன்வைத்து, தடியூன்றி நடப்பது போன்ற தோற்றத்தில் இந்த ஔவையாரின் சிலை அமைந்திருக்கின்றது.



பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் இத்தகைய பிரபலங்களின் சிலைகள் அமைவதால் பலருடைய கவனத்தையும் ஈர்ப்பதாக இருக்கின்றன. இதனால் அடுத்த தலைமுறையினரும், சுற்றுலாப் பயணிகளும் சிலைக்கு உரியவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்த முடிகின்றது. கலை என்பதே ஐதீகமும் நம்பிக்கையும்தான் என்பதால், அந்த வகையில் ஔவையார் பற்றியும், அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு பற்றியும் பலர் அறிந்து கொள்ள இந்த ஔவையார் சிலை உதவியாக இருந்திருக்கின்றது. தமிழ்நாட்டிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள், முக்கியமாகத் தமிழர்கள் மெரினா கடற்கரைக்குச் செல்லும்போது, ஆர்வத்தோடு பார்க்கும் முக்கிய நினைவுச் சின்னமாக ஔவை-யாரின் சிலையும் அமைந்திருக்கின்றது. அதனால் இன்று ஔவையார் பற்றிய தேடல்களும் அதிகரித்திருக்கின்றன. இதே போலவே யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களிலும் ஔவையார் சிலையைக் கண்டிருக்கின்றேன்.

ஔவையார் என்னும் பெயர் பூண்ட, வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பலர் இருந்ததாக ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. சங்ககாலம், இடைக்காலம், சோழர்காலம் என்று ஒவ்வொரு காலகட்டத்தில் இருந்த பெண் புலவர்களையும் ஔவையார் என்றே அழைத்தனர். ஔவை என்பது மூதாட்டி என்ற கருத்தை உடையது என்று பழந்தமிழ் அகராதி குறிப்பிட்டாலும், பிற்காலத்தில் ஔவை என்ற சொல், அறிவில் முதிர்ச்சி அடைந்தவர்களைக் குறிக்கும் சொல்லாகவும் கருதப்பட்டது. ஔவையாரின் வரலாறு, காலம் ஆகியவை இன்னும் சரியான முறையில் வரையறுக்கப் படவில்லை. சங்கநூல்களான குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் ஔவையாரின் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. சிறுவர்களுக்காக அகரவரிசையில் எழுதப்பட்ட 'ஆத்திசூடி' மற்றும் முக்கியமாகக் கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, அசதிக்கோவை போன்ற அவரது நூல்களையும் இங்கே குறிப்பிடலாம். சங்கப் பாடல்கள், தனிப்பாடல்கள், நீதி நூல்கள், சமய நூல்கள், சிற்றிலக்கியம் என்று இவற்றை வகைப்படுத்தலாம். ஔவையாரின் புலமையை மெச்சிய அதியமான் மன்னன் தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை அவருக்கு வழங்கியதாகவும் கதை உண்டு.

தமிழ் இலக்கியத்திற்கு ஔவையார் ஆற்றிய தொண்டைப் பாராட்டி ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்திலன்று தமிழ் நாட்டில் நாகபட்டினத்தில் உள்ள வேதாரணியத்தில் உள்ள கோயிலில் உள்ளூர் மக்களால் நீண்ட காலமாக விழா எடுக்கப்படுகின்றது. இங்கேதான் ஔவையாரிடம் முருகக்-கடவுள் சிறுவனாக வந்து 'சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா' என்று கேட்டதாக ஐதிக கதையுண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முப்பாண்டல் என்ற கிராமத்தில் ஔவையாருக்கு ஒரு பழமைவாய்ந்த கோயிலும் உண்டு.

தமிழ் நாட்டில் உள்ள சேலம் மாவட்டத்தில் உத்தமசோழபுரம் என்ற இடத்தில் பழமைவாய்ந்த கரபுரநாதர் திருக்கோயில் முகப்பு வாசலுக்கு அருகே ஔவையார் சிலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இது தமிழகத்திலேயே பெரிய ஔவையார் சிலை ஆகும். கொல்லிமலையை ஆண்ட பாரி மன்னனின் மக்கள் அங்கவை, சங்கவை ஆகிய இருவரையும் ஔவையார் கரபுரநாதர் கோயிலுக்கு அழைத்து வந்து, எப்போதுமே பகைவர்களாக இருந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பகையை நீக்கி, பாரியின் மக்களுக்கு திருமணம் நடத்தி வைத்ததாகவும் ஐதிகக் கதை உண்டு.

2009 ஆம் ஆண்டு ரெட்ஹென் அச்சகத்தினர் மனித வாழ்வுக்கேற்ற மகத்தான தத்துவங்களை எடுத்துச் சொல்லும் ஔவையாரின் படைப்புக்களைத் தெரிவு செய்து ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டிருந்தனர். மகளிர் தினத்திலன்று ஔவையாரின் பெயரில் சிறந்த பெண்மணி ஒருவருக்குத் தமிழ்நாட்டில் விருதும் வழங்கப் படுகின்றது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம்

14

## பதேர் பாஞ்சாலி: ஒரு வறுமைக் காவியம்

1998 ஆம் ஆண்டில் இது நடந்ததாக ஞாபகம். ரொறன்ரோவில் உள்ள ஒன்ராறியோ ஆர்ட் கலரியின் (Art Gallery of Ontario) திரைஅரங்கம் வேற்றினத்தவர்களால் நிரம்பி வழிந்திருந்தது. சரியான இடத்திற்குத்–தான் வந்திருக்கின்றோமா என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டு இருக்கையில் அமர்ந்தோம். ஒன்று அல்லது இரண்டு பார்வையாளர்கள் தான் இருப்பார்கள் என்ற எண்ணத்தில் ஏதாவது ஓர் ஆர்ட் மூவி பார்க்க வந்த எங்களுக்கு பெரும் ஆச்சரியம். அரங்கத்தின் அனைத்து ஆசனங்களும் நிரம்பியிருந்தது. படத்தின் பெயர் கூட சரியாகத் தெரியாமல் இருந்த எங்களுக்கு இது ஓர் உலகப் புகழ்பெற்ற வங்காளிப் (Bengali) படமென்பது பின்னர்தான் தெரியவந்தது.


உலக சினிமா வரலாற்றில் சிறந்த படங்களில் முக்கியமான தொன்றாகக் கருதப்படும் "பதேர் பாஞ்சாலி" படம் அங்கு திரையிடப்பட்டது. பரிச்சயம் இல்லாத மொழியாக இருந்த போதும், காட்சிகள் மூலமும், கதாபாத்திரங்கள் மூலமும் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்திய அந்தப் படம் அப்படியே மனதை உறைய வைத்துவிட்டது. இப்படியெல்லாம் ஒரு வாழ்வியலின் நிதர்சனங்களைப் பதிவுகளாக்க முடியுமா என்று எம்மை வியப்படைய வைத்தது.

கறுப்பு வெள்ளையில் தெரிந்த உணர்வுகளின் வர்ணங்கள், மனதும், காட்சிகளும் ஒன்றித்துப் போன ஒளிப்பதிவு, ஒவ்வொரு கதாபாத்திரங்க–ளின் இயல்பான நடிப்பு, மழையில் நனைந்து இறந்து போகும் சிறு பெண், ஏழ்மையின் தாய், உழைக்கச் செல்லும் தந்தை, மனதில் பதிந்த பாட்டியின் மரணம் இப்படி யதார்த்தமான ஏழ்மையையும், சோகத்தையும் திரைக் கவிதையாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தது.

எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் அது வாசகர்களிடமும், ரசிகர்களிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினால் அது ஒரு காத்திரமான படைப்பாகக் கருதப்படும். பல ஆண்டுகள் கழிந்தும் இன்றும் தீவிர சினிமாவை நேசிக்கும் உலக மக்களால் நினைவு கூரப்படும் ஒரு படைப்புத்தான் "பதேர் பாஞ்சாலி" திரைப்படம்.

1929 ஆம் ஆண்டு பிபூதிபூஷன் பந்தோபாத்யாய் (Bibhutibhushan Bandopadhyay) என்பவரால் வங்காள மொழியில் எழுதப்பட்டு வெளியான "பதேர் பாஞ்சாலி" என்ற நாவலை 1955 ஆம் ஆண்டு சத்யஜித் ரே என்ற இயக்குநர் அதே பெயரில் திரைப்படமாக எடுத்தார். தனது மனைவியின் நகைகளையும், சொத்துக்களையும் விற்று கடனில் இயக்கிய இத்திரைப்படம் அவரது முதலாவது திரைப்படம் என்பதை மனம் நம்ப மறுத்துவிடுகின்றது.

1913ஆம் ஆண்டு நோபல் பரிசுபெற்ற ரவீந்திரநாத் தாகூர் நடத்திய சாந்தி நிகேதனில் சேர்ந்து, ஓவியப் பயிற்சி முடித்து, ஒரு விளம்பர நிறுவனத்தில் ஓவியராகப் பணியாற்றிய பொழுது அவரிடம் புத்தக அட்டை வரைவதற்காகக் கொடுக்கப்பட்ட "பதேர் பாஞ்சாலி" என்ற நாவலை படித்தபோதுதான் அதை திரைப்படமாக எடுக்கும் எண்ணம் அவருக்கு உண்டானது.



ஏழைக் குடும்பம் ஒன்று சொந்த ஊரில் வாழ வழிய ில்லாமல் பிழைப்புக்காக வெளியூருக்குச் செல்வதே இந்த படத்தின் மையக்கரு. ஒரு கிராமத்தில் வாழும் ஏழைக் குடும்பத்தில் உள்ள இரண்டு குழந்தைகளை வறுமையின் நிறம் சிவப்பாக திரை முழுவதும் ஓடவிட்ட சிறந்த, யதார்த்தமான பதிவுதான் இந்தத் திரைப்படம். குடும்பத்தில் உள்ள ஏழ்மையைப் பற்றிய கவலையில்லாமல் திரிந்து, வீட்டில் உள்ள பாட்டியிடம் கதை கேட்கும் சிறுமியும், அவளின் தம்பி, அப்பு என்ற சிறுவனும் மனம் நிறைந்து செல்கின்றார்கள்.

அக்கம் பக்கம் வீடுகளில்லாத ஒரு பாழடைந்த வீடு, குடும்ப வருமானம் இல்லாமல் வெளியூருக்கு வேலைதேடிச் செல்லும் குடும்பத் தலைவன், மழையில் விளையாடிவிட்டு வீட்டிற்கு வரும் மகள் துர்க்காவின் காய்ச்சல், குளிர் எடுக்காமல் பார்த்துக்கொள்ளச் சொல்லும் மருத்துவர், இரவு நெற்றியில் ஈரத்துணி போடும் துர்க்காவின் அம்மா, சோவெனப் பெய்யும் பலமான மழை, ஒழுகும் பழைய வீட்டின் கூரை, திரைகள் இல்லாத ஜன்னல்கள், குளிர் கூடிக் காய்ச்சல் அதிகரித்து மரணத்தை எதிர்நோக்கும் துர்க்கா, ஆசை ஆசையாக அவளுக்கு உடை வாங்கி வரும் தந்தை, பிழைப்புக்காக கிராமத்தைவிட்டு வெளியேறும் குடும்பம். இது தான் "பதேர் பாஞ்சாலி" என்ற உயிரைத் தொட்டுச்செல்லும் வறுமைக் காவியம்.

இயற்கையின் ஒளியை பெருமளவில் பயன்படுத்தி, ஒளிப்பதிவு செய்த ஒளிப்பதிவாளர் சுப்ராதா மித்ராவின் ஆளுமை, மற்றும் சிதார் மேதை ரவிசங்கரின் இசை மேலும் இந்தப் படத்திற்கு வலுச் சேர்க்கின்றன.

ஒன்றாறியோ ஆர்ட் கலரியில் இந்தத் திரைப்படத்தின் காட்சி முடிந்த பின்னர் அங்கிருந்த அனைத்து வேற்றினத்தவர்களும் எழுந்து நின்று கை தட்டி சத்யஜித் ரேக்கு மரியாதை செலுத்திய போது எமது கண்களில் அரும்பிய ஆனந்தக் கண்ணீர் துளிகள் மதிப்புக்குரிய சத்யஜித் ரே என்ற கலைஞனை பெருமைப்படுத்திச் சென்றது.

வித்தியாசமான கோணத்தில் பார்க்கப்பட வேண்டிய இந்த அருமையான காவியத்தை பார்க்காதவர்கள் இனியும் இருக்கமாட்டார்கள்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்



# கோட்சேயின் வாக்குமூலம்

டெல்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில், காந்தி கொலை வழக்கு விசாரணை நடந்தது. 1948 நவம்பர் 8ந்தேதி கோட்சே வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலம், ஆங்கிலத்தில் மொத்தம் 92 பக்கங்களில் எழுதப்பட்டிருந்தது. மொத்தம் ஐந்து மணி நேரம் நின்று கொண்டே வாக்குமூலத்தை கோட்சே படித்தார். வாக்குமூலத்தில் கோட்சே கூறியிருந்ததாவது

காந்தியின் கொள்கையால் நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டும் என்று அவரின் கால்களுக்கு செருப்பாக இருக்க ஆசைப்பட்டு அவருடன் சேர்ந்தேன்.

தெய்வ பக்தியுள்ள பிராமணக் குடும்பத்தில் நான் பிறந்தேன். இந்துவாகப் பிறந்ததில் பெருமைப்படுகிறேன். நான் வளர வளர என் மதத்தின் மீது எனக்கு மிகுந்த பற்றுதல் ஏற்பட்டது. ஆனால் எனக்கு எவ்வித மூட நம்பிக்கையும் ஏற்படவில்லை. தீண்டாமை ஒழியவும், சாதி ஒழியவும் பாடுபட்டேன். எல்லா இந்துக்களையும் சமமாக நடத்த வேண்டும், அவர்களுக்கு இடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கக் கூடாது என்று வற்புறுத்தி வந்துள்ளேன். சுவாமி விவேகானந்தர், திலகர், கோகலே, தாதாபாய் நவ்ரோஜி போன்றோர் எழுதிய நூல்களை படித்திருக்கிறேன்.

1946ல் முகமதியர்களின் கொடுமை சொல்லொணாத துயரத்தைத் தந்தது. அரசாங்கத்தின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. நவகாளியில் நடந்த நிகழ்ச்சிகள் எங்கள் ரத்தத்தைக் கொதிப்படையச் செய்தன. அத்தகைய கொடுமைகள் புரிந்த முஸ்லிம்களை மகாத்மா காந்தி ஆதரித்தார். அதுமட்டுமல்ல டெல்லியில் ஒரு இந்துக் கோவிலில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் "குர்ஆன்" வாசகங்களைப் படிக்கச் செய்தார்.

முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் மசூதியில் பகவத் கீதையை மகாத்மா காந்தியால் படிக்க முடியுமா? 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ந்தேதி விளக்குகள் அலங்காரத்துடன் நாடெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட அதே நாளில் பஞ்சாபில் இந்துக்கள் உடைமைகளை முஸ்லிம்கள் தீக்கு இரையாக்கினார்கள். இந்துக்களின் ரத்தம், பஞ்சாப் ஆற்று நீரில் கலந்தோடியது.

மேற்கு பாகிஸ்தானில் இருந்த சிறுபான்மை இந்துக்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். அதேபோல கிழக்குப் பாகிஸ்தானில் இருந்த முகமதியர்களும் நடந்து கொண்டனர். 11 கோடி மக்கள் வீடு இழந்தனர். இவ்வளவு நடந்தும் மகாத்மா காந்தி, "முகமதியர்களின் செயலில் ஒரு களங்கமுமில்லை" என்று பரிந்து பேசினார். என் ரத்தம் கொதித்தது. இனிமேல் நான் பொறுமையாக இருக்க முடியாத சூழ்நிலை உருவானது.

காந்தியடிகளை கடுமையான வார்த்தைகளால் நான் தாக்க விரும்பவில்லை. அவருடைய கொள்கையும், மார்க்கத்தையும் முழுவதாக நிராகரிப்பதாகச் சொல்ல விரும்பவில்லை. பிரிட்டிஷ்காரர்கள், நம்மிடையே பிரிவினையை உண்டாக்கி, சுகமாக நம் நாட்டை ஆண்டு வந்தபோது, மகாத்மா காந்தி அதை எதிர்த்துப் போராடி பெரும் வெற்றியை நமக்குத் தந்தவர் என்பதை நான் மறுக்கவில்லை அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தியா பிரிக்கப்படுவதற்குக் காரணமாகவும், துணையாகவும் இருந்தவர் அவர். அதனால் அவர் இன்னும் நாட்டில் இருந்தால், இந்தியாவிற்குத் துன்பமும், இழப்பும் ஏற்படும்.

நல்லதோ, கெட்டதோ அவர் எடுக்கும் முடிவினையே இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பிடிவாதம் அவரிடம் காணப்பட்டது. இந்தியா அவருடைய தலைமையை நாடினால் அது நம் நாட்டை எங்கேயோ கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அவரே இங்கு உள்ள எல்லாவற்றையும் இயக்குபவர் ஒரு நீதிபதி என்றும் கூறலாம். "சத்தியாக்கிரகம்" என்றும் அழியாது என்பது அவர் அறிந்த சூத்திரம். காந்திஜியே தன் செயல்களுக்குத் தாமே வழக்கறிஞரும், நீதிபதியும் எனலாம். அவரது அரசியல், பகுத்தறிவு இல்லாதது எனப் பெரும்பாலானோர் நினைத்தனர்.

ஜின்னாவின் இரும்புப்பிடி, எக்கு உள்ளத்தின் முன் காந்திஜியின் ஆத்ம சக்தி, அகிம்சைக் கொள்கை அனைத்தும் தவிடு பொடியாகிவிட்டன. ஜின்னாவிடம் தம் கொள்கை ஒருக்காலும் வெற்றி பெறாது என்று தெரிந்திருந்தும் அவர் கொள்கையை மாற்றிக் கொள்ளாமலேயே இருந்தார்

தம் தோல்வியையும் அவர் ஒப்புக்கொள்ளவே இல்லை. மற்ற மேதைகள் ஜின்னாவுடன் பேசி அவரை முறியடிக்கவும் வழிவிடவில்லை. இமயமலைப் போன்ற பெரிய தவறுகளைச் செய்த வண்ணம் இருந்தார். நாட்டைப் பிளந்து துண்டு துண்டாக்கியவரைத் "தெய்வம்" என மற்றவர் மதித்தாலும் என் உள்ளம் ஏனோ அவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது, அவர் மீது கோபம்தான் வருகிறது.

நேதாஜி விடுதலைப்போரில் வன்முறையை ஆதரிப்பவர்களை மட்டும் காந்திஜி எதிர்த்தார் என்பதில்லை. அவருடைய அரசியல் கருத்துக்கு எதிரான கருத்துக்கள் உடையவர்களையும் வெறுத்தார். அவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது அவருக்கு இருந்த வெறுப்புக்கு சந்திரபோஸ் ஓர் எடுத்துக்காட்டு. காங்கிரசில் இருந்து சந்திரபோஸ் தூக்கி எறியப்படும் வரை, காந்திஜியின் வன்மம் முற்றிலும் அகலவில்லை.

நம் நாடு வல்லரசாகத் திகழவேண்டுமானால், காந்தியடிகளின் கொள்கையை நாம் கைவிடவேண்டும். அவர் உயிரோடிருந்தால் நாம் அவர் கொள்கைகளிலிருந்து மாறுபட்டுச் செயல்பட முடியாது. நான் இந்த விடயத்தை நன்கு அலசி ஆராய்ந்த பிறகே அவரைக் கொல்ல வேண்டும் என்று முடிவு எடுத்தேன்.
பட்டப்பகலில் சுமார் 400 பேர் கூடியிருந்த கூட்டத்தில் காந்திஜியை நான் சுட்டேன். அது உண்மை.

சுட்ட பிறகு ஓடுவதற்கு நான் முயற்சி செய்யவில்லை. தப்பி ஓடும் எண்ணமும் எனக்கு இல்லை. என்னை சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்ளவும் முயலவில்லை. கொலை பற்றி நீதிமன்றத்தில் என் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்கவே விரும்பினேன். மரியாதைக்குரிய நீதிமன்றம் எனக்கு எந்த தண்டனையையும் விதிக்குமாறு கட்டளை யிடலாம். என் மீது கருணை காட்டவேண்டும் என்றும் நான் கேட்கவில்லை.

(28ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 23

மே மாதம் வந்தாலே முள்ளிவாய்க்கால் துயரம் மீண்டும் நினைப்புக்கு வரும். அந்த சோகத்தைப் பகிர முகப்புத்தகத்தை விட்டால் மாற்றேது எனுமளவிற்கு சென்ற மாதம் முகப்புத்தகத்தில் முள்ளிவாய்க்கால் துயரத்தைப் பலரும் பகிர்ந்து கொண்டனர். குறிப்பாக வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் உரை வீடியோ வடிவில் பலராலும் பகிரப்பட்டுக் கொண்டிருந்தது. அவரது அந்த உரையில் வந்த பலதும் ஆறுதல் தருவதாய் இருந்தன. *'மனித உரிமைகள் மறக்கப்பட்டு, ஊடக உள்நுழைவு மறுக்கப்பட்டு.. சாட்சியில்லாது நடத்தப்பட்ட சமரே முள்ளிவாய்க்கால்... தடை செய்யப்பட்ட போராயுதங்கள் பாவிக்கப்பட்டன என்று பறைசாற்றின பல்நாட்டு ஊடகங்கள் அப்போது..... வெளிநாட்டு உதவிகள் உதாசீனப்படுத்தப்பட்டு, உள்நாட்டு உதவிகள் மறுக்கப்பட்டு... உண்மைநிலை உரைக்காதுவிட்டு... மக்கள் தொகையைக் குறைத்துக்கூறி, அப்பாவிப் பெண்கள், பிள்ளைகள், குழந்தைகளின் உயிர்களைக் காவிச்சென்றதே முள்ளிவாய்க்கால்.... முள்ளிவாய்க்கால் எமது சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப் பதிவு..."* என்று சென்றது அவரது பேச்சு.

முதலமைச்சர் மட்டுமல்ல இலங்கையில் இருந்து பலரும் இட்ட பல பதிவுகள் காரமானதாய் இருந்தன. அதற்கு சமீபத்தில் கிட்டிய அரசியல் மாற்றமும், பேச்சுரிமையும் காரணமாயிருக்கலாம். இலங்கையில் இருந்து இடப்பட்டிருந்த இன்னொரு பதிவு வெளிநாட்டில் வாழும் எம் மனதில் தைப்பது போலிருந்தது. *'ஈழத் தமிழர் என்று ஐரோப்பா, அமெரிக்கா, கனடா புலம் பெயர்ந்தவர்களும் இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். ஏனெனில் ஈழத்தில் தமிழன் கொடுத்த உயிர்தான் உங்கள் இன்றைய வாழ்க்கை."* என்று அதில் இருந்தது.

அதேபோன்ற பிறிதொரு பதிவில், *'எங்கள் இனம் வைகாசி 18 அழிக்கப்பட்டதாய் எப்படிக் கூற முடியும்? அது அதற்கு முன்பும் அதற்குப் பின்பும் அழிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. வேற்று இனத்தால் மட்டுமல்ல எங்களாலும்தான்...' எத்தனை பேரால் இதைப் புரிந்து கொள்ள முடிகிறது?"* என்றிருந்தது. இது ஒருபுறமிருக்க....

இன்னொரு துயர சம்பவமும் மே 18 காலப்பகுதியில் முகப்புத்தக உலகை அழ வைத்துக் கொண்டிருந்தது. புங்குடுதீவில் ஒரு பதின்ம வயது மாணவி வல்லுறவின்பின் கொலையான சம்பவம் குறித்தும் பலரும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் அவற்றில் பலவும் தமிழினத்தின் பாதுகாப்பற்ற நிலையைப் பேசுவதை விடுத்து கூட்டுப் பாலியல் வன்முறை குறித்த விவரங்களையே பதிந்து கொண்டிருந்தமை விசனத்துடன் கவனிக்கத் தக்கதாயிருந்தது.

*'பிள்ளைகளைத் தின்னும் கழுகுகளைக் கொத்தும் ராஜாளிகள் எங்கு போயின?"* என சமூகப் பாதுகாப்புக்காக யாரையோ தேடிய ஒருவரின் ஓலம் பதிவாக ஒலித்தது. அந்த நேரத்தில் கவனத்தில் பதிந்த இன்னொரு பதிவு இது: *'கூட்டுப் பாலியல் வன்முறைக்கு ஆளாகி மனம் பதைக்கும் விதத்தில் பலியான நம் மாணவி பற்றி முகநூலில் பரவலாகச் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றதே.. தமிழ்நாட்டில் இருந்து எந்தப் பெண்கள் அமைப்பாவது குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை இது கொஞ்சம் நெருடலாக இருக்கின்றது.. தமிழகத்தைச் சேர்ந்த பல தோழியரிடம், இக்குரூர சம்பவத்துக்கு எதிரான கண்டன அறிக்கையில் சேருமாறு விட்ட வேண்டுகோளுக்கும் யாரும் இதுவரை செவிசாய்க்கவில்லை என்பதும் ஏனென்று புரியவில்லை."* என ஈழத்தமிழ் பெண் ஒருவர் கவலையுடன் தன் கருத்தை முகப்புத்தகத்தில் பதிந்திருந்தார்.

சந்தேக நபர்கள் போதை வஸ்து உட்கொண்ட பின்னர்தான் இந்த வன்செயலில் ஈடுபட்டதாக தெரிவித்து ஈழப்பகுதியில் போதைவஸ்துக்கு எதிரான இயக்கம் தேவைப்படும் அவசியத்தையும் குறிப்பிட்டுக் கொண்டிருந்தனர். இந்த 'போதைவஸ்து" 'தண்டனை" என்பன பற்றிய பதிவுகள் கடந்த மே மாத ஆரம்பத்தில் இந்தேனேசியாலில் தண்டனை பெற்ற ஈழத்தமிழன் மயூரன் குறித்து முகப்புத்தகத்தில் பலரும் குரல் கொடுத்ததை என் நினைப்புக்கு கொணர்ந்தன. அப்போது ஒருவர் *'திருந்தியவனுக்கும், தவறை உணரந்தவனுக்கும் ஏதாவது கண் காணா தீவிலாவது வாழ அனுமதித்து இருக்கலாம்"* என்று எழுதியிருந்தார். அதற்கு இன்னொருவர் *'நாளை தமிழின எதிரி ராஜபக்ச தண்டிக்கப்பட்டு சில வருடங்கள் வழக்கு இழுபட்டு கடைசியில் தண்டனை நிறைவேற்றப்படும் போது நான் சிறையில் திருந்தி விட்டேன் என்று சொன்னால் மன்னித்து விடுவீர்களா?"* என்று பதிந்திருந்ததையும் அசை மீட்டேன்.

புங்குடுதீவு பாலியல் வன்முறையின் பின் நடந்த அசம்பாவிதங்களையும் சம்பவங்களையும் பலரும் நிமிடத்திற்கு நிமிடம் முகப்புத்தக்தின் ஊடாகப் பரிமாறிக் கொண்டிருந்தனர். அதையொட்டியதாய் ஒரு பதிவர் *'நான் அந்த சனங்களின் உணர்வுகளை மதிக்கின்றேன் அறம் பொய்த்த நாட்டில் மக்களே அரசு. அவர்களே நீதி. அவர் தீர்ப்பே இறுதி தீர்ப்பு. அந்த ஈனர்களை சனங்களின் கைகளில் ஒப்படையுங்கள். இவ் ஈனர்களுக்கு சனங்களே தீர்ப்பு எழுதட்டும்!"* என்று உணர்ச்சி பொங்கப் பதிவிட்டிருந்தார்.


ம்...ம்...ம்.. இவ்வாறு கண்டதை சொல்லிக் கொண்டே போகலாம். மே 18ந்தேதியன்று முகப்புத்தகத்தை அலசிக் கொண்டிருந்தபோது கண்ட பதிவுகளில் ஒன்றை இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஈழப்பகுதியில் நடந்த அஞ்சலி நிகழ்வுக்கு வந்திருந்த இரண்டு கால்களையும் இழந்த முன்னாள் போராளி ஒருவர் பற்றி இடப்பட்டிருந்த பதிவு அது. நெஞ்சைத் தொட்டது.

அப்போராளி சொல்கிறார்: *'இரண்டு கால்களையும் இழந்தபோதும் முச்சக்கர வண்டி ஓட்டுநராக தொழில்புரிகின்றேன். கால்களால் இயக்கவேண்டிய முச்சக்கர வண்டியின் பகுதிகளை கைகளால் இயக்கக் கூடியவாறு மாற்றியமைத்துள்ளேன். இந்த வீதியால் செல்லும்போது அனைத்தையும் இழந்து விட்டோம் என்ற மனவுணர்வு ஏற்படும். இறுதித் தருணம் வரையில் இந்த மண்ணில் நான் இருந்தேன். இங்கு நடந்த அனைத்தையும் நான் பார்த்தேன். அனைத்தையும் இழந்து விட்டோம் என்னத்தை சொல்வது..."*

***'அனைத்தையும் இழந்து விட்டோம் என்னத்தை சொல்வது..."*** என்ற அவரது பேச்சு ஒரு சோகக் கவிதை போலவே என் மனதில் எதிரொலித்தது. கூடவே அது *'இருண்ட காலங்களிலும் பாடலும் கவிதையும் இருக்கும். ஆனால் இருண்ட காலங்களைப் பற்றி இருக்கும்"* என்ற புகழ்பெற்ற கவிதை வரியை சொல்லாமல் சொன்னதுபோலவும் இருந்தது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் ஐ. பி. சி. தமிழ் தொலைக்காட்சி ஆரம்ப விழா






லண்டனில் நீண்ட காலமாக இயங்கி வரும் ஐ.பி.சி வானொலி நிலையம் கடந்த மாதத்திலிருந்து ஐரோப்பாவுக்கான தமிழ் தொலைக்காட்சிச் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதற்கான அரங்க நிகழ்வொன் - றைச் சிறப்பாக நடத்தியது. லண்டனில் கடந்த மூன்று தசாப்தமாக இயங்கி வரும் 'நாட்டிய வித்தகி' ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலய' மாணவிகள் வழங்கிய 'தமிழா தமிழா...' பாடலுக்கான வரவேற்பு நடனத்துடன் விழா ஆரம்பமானது. வானொலி ஊடகத்துறையில் மூத்தவர்களாக விளங்கும் ஆனந்தி சூரியப்பிரகாசம், பி. எச். அப்துல் ஹமீத், விமல் சொக்கநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். ஐ.பி.சி. வானொலிச் சேவையின் ஆரம்பகர்த்தாவான கலைஞர் ஏ. சி. தாசீசியஸ் உட்பட ஆறு ஊடக சாதனையாளர்கள் கெலன் மெக்ரே அவர்களால் விழாவில் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். ஒலிபரப்புத்துறையில் பெயர் துலங்கப் பணியாற்றிவரும் எஸ். கே. ராஜன், மற்றும் சுமதி சுரேஷன் ஆகிய இருவரும் இணைந்து நிகழ்ச்சிகளை அற்புதமாகத் தொகுத்து வழங்கினர்.



# ஜேர்மனியில் 'வெற்றிமணி' முன்னெடுத்த பேராசிரியர் சண்முகதாஸ் பவளவிழா









ஜேர்மனியிலிருந்து வெளிவரும் 'வெற்றிமணி' பத்திரிகை முன்னெடுத்த பேராசிரியர் அ. சண்முகதாஸின் பவளவிழாவும், மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'யப்பானிய காதற் பாடல்கள்' நூல் வெளியீடும் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. ஆலய வழிலாட்டுடன் ஆரம்பமான இவ்விழாவை வெற்றிமணி ஆசிரியர் மு. க. சு. சிவகுமாரன் ஏற்பாடு செய்திருந்தார். வாழ்த்துரைகளும் ஆசியுரைகளும் நாட்டிய நிகழ்வுகளும் சிறப்பு அம்சங்களாக இங்கு இடம்பெற்றன. இவ்விழாவில் 'வெற்றிமணி' வழங்கிய வளர்கலை விருதுகளை நிமலன் சத்தியகுமார் (பரதக்கலை), அபிராமி சக்திவேல் (நிழல்படம்), வைஷ்ணவி ஜெகன்மோகன் (ஓவியம்), நர்த்தனா கீர்த்தனா மனோரஞ்சன் ஆகிய இளவல்கள் பவளவிழாத் தம்பதிகளிடமிருந்து பெற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் யாழ். இந்துவின் 125வது ஆண்டு விழா





கனடாவில் இயங்கும் யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் மேற்படி கல்லூரியின் 125வது ஆண்டு பூர்த்தியையொட்டிய விழாவை கடந்த மாதம் 4ம் திகதி ஸ்காபரோவில் இரவு வருந்துடன் இணைந்ததாக நடத்தியது. சங்கத் தலைவர் கதிர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விருதுகள் வழங்கலுடன், ஞாபகார்த்த முத்திரை வெளியீடு, சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. கனடா தேசிய கீதம் பாடும்போது சங்க நிர்வாகிகள் அனைவரும் கூட்டாக நிற்கும் படம் மேலே பிரசுரமாகியுள்ளது.









# கிளீவ்லான்ட்டில் நடைபெற்ற தியாகராஜ உற்சவம்








அமெரிக்காவின் கிளீவ்லான்ட் தியாகராஜ உற்சவம் 38வது ஆண்டாக கடந்த மாதம் நடைபெற்றது. முதன்முறையாக மேற்கத்திய கலைஞர்களும் இதில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. தமது எட்டு வயதிலிருந்து இதில் பங்குபற்றி புல்லாங்குழல் இசை வழங்கிவரும் கனடாவாழ் செல்வி அஜந்தி மதனாகரனின் நிகழ்ச்சி இவ்வருட விழாவிலும் இடம்பெற்றது. செல்வி அஜந்தி தமது இசைத்துறைப் பணிக்காக 'தமிழர் தகவல்' சிறப்பு விருது பெற்ற கலைஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபரோ அல்பேர்ட் காம்பல் சதுக்கத்தில் மே 18 நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் ஆறாம் ஆண்டு நினைவு நாள்

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் கடந்த மாதம் 18ம் திகதி ஸ்காபரோ அல்பேர்ட் காம்பல் சதுக்கத்தில் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் மேற்கொள்ளப்பட்டது. கனடியத் தமிழர் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த தமிழீழ உணர்வாளர்களான இயக்குனர் கௌதமன் மற்றும் பாடலாசிரியரும் கவிஞருமான சிநேகன் ஆகியோர் கலந்துகொண்டு ஆழமானதும் அர்த்தம் நிறைந்துமான கருத்துரைகளை வழங்கினர். கனடிய அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் பலரும் இங்கு உரையாற்றினர். இளையோர்களின் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.








# Inforce Life நிறுவன முதல் காலாண்டு மதிப்பளிப்பு





பிரபல தொழில் அதிபர் சந்திரன் இராசலிங்கத்தின் Inforce Life Financial Services நிறுவனத்தின் இவ்வருட முதல் காலாண்டு நிகழ்வும் ஒன்றுகூடலும் ஸ்காபரோவிலுள்ள அதன் தலைமையகத்தில் கடந்த மாதம் நடைபெற்றது. இந்தக் காலப்பகுதியின் சிறந்த முகவருக்கான (Agent of the month) பரிசினை ஜெயபுஷ்பா தணிகாசலம் பெற்றார். Top sales Application பரிசினை இளம் முகவரான ரெனிசன் டிலீப்குமார் பெற்றார். நிகழ்வின்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை இங்கு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கனடிய தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு அமைய விருது விழா'









கனடிய தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு அமையத்தின் இவ்வருட விருது விழா கடந்த மாதம் 4ஆம் திகதி ஸ்காபரோவிலுள்ள JC's Banquet Hall கலையரங்கத்தில் நடைபெற்றது. முக்கியமான நான்கு விருதுகளில் ஒன்றான அழகிய பனை விருது பிரான்சில் வாழும் மூத்த கலைலஞர் ஏ. ரகுநாதனுக்கு வழங்கப்பட்டது. கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரன் ஞாபகார்த்த விருது இலங்கையில் வசிக்கும் அத்தனாஸ் ஜேசுராசாவுக்கும், கலாஜோதி 'சானா' ஞாபகார்த்த விருது அண்மையில் காலஞ்சென்ற கலைஞர் கமலினி செல்வராஜனுக்கும், பாலு மகேந்திரா விருது (சிறந்த திரைப்படத்துக்கு) 'A Gun and A Ring' படத்துக்கும் வழங்கப்பட்டன. 2011ம் ஆண்டுக்கும் 2014ம் ஆண்டுக்குமிடையில் வெளியான திரைப்படங்களைச் சார்ந்த பதினெட்டு பல்துறைக் கஞைர்கள் விருதுகள் வழங்கி சிறப்புச் செய்யப்பட்டனர். அவர்கள் விபரத்தை 21ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

இது தவிர மேலும் இரண்டு சிறப்பு விருதுகள் இங்கு வழங்கப்பட்டது. உயர்வான கலைத்திறன், அயராத உழைப்பு, சிறந்த தமிழ்ப் பண்பு ஆகியவைகளுக்காகவும் அழகிய பனை விருதினை வடிவமைத்தமைக்காகவும் வரைகலை நிபுணர் சசிகரன் பத்மநாதனுக்கு 'நினைவு விருது' வழங்கப்பட்டது. கடந்த 25 வருடங்களாக கனடிய தமிழ்ச் சினிமாவில் ஒளிப்பதிவாளராக, இயக்குனராக, நடிகராக படத்தொகுப்பாளராகச் சாதனை புரிந்து வரும் கலைஞர் ரவி அச்சுதனுக்கு CTCEO - 'அழகிய பனை விருது' சிறப்பாக வழங்கப்பட்டது.

'ஆடலகம்' நடனப் பாடசாலை அதிபர் அனோஜினி குமாரதாசனின் சிறப்பு நடனம் விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியாக இடம்பெற்றது. மூத்த எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் அவர்கள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றினார். (ஒளிப்படங்கள் - செய்தி.கொம்)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய தமிழ்த் திரைப்பட விருது விழா

19ஆம் பக்கத் தொடர்ச்சி

BAVADHARANI Mathivasan Memorial Award for Best Short Film 2015 to KOONAL CHITHIRANKAL (Avadaram Production – France)
VLAMBARAM News paper- Critic Award for Best Shot film to God is Dead
Best Actor Award to PREAMNATH RAGUNATHAN From - Film SAKARAP POOKKAL
Best Actress award to THENUKA KANTHARAJAH From - Film A GUN AND A RING
Best Villain Actor Award to GANGATHARAN KANTHASAMY From - Film A GUN AND A RING
Best Supporting Actor Award to JENA K. SIVA From - Film SAKARAP POOKKAL
Best Supporting Actress Award to CHITHRA FELIX From – Film URAVU
Best Comedian Actor Award to K. NARTHTHANALINGAM From - Film URAVU
Best Director Award for to LENIN M. Sivam From - Film A GUN AND A RING
Best Child Artist Award to THENUSHA YOGATHASAN From - Film A GUN AND A RING
Best Cinematography Award to JEY M - From - Film KONN
Best Screenplay Award to LENIN M. Sivam From - Film A GUN AND A RING
Best Background Music Award to PRAVEEN MANI From - Film A GUN AND A RING
Best Movie Editor Award to PRASH LINGAM From - Film A GUN AND A RING
Best Song Composer Award to JAGAN TJP From - Film SAKARAP POOKKAL – Song Malazaikkalam..
Best Playback Singer – Male Award to UNNIKRISHNAN KV Film SAKARAP POOKKAL – Song Malazaikkalam..
Best Playback Singer – Female Award to ANUSHA SIVALINGAM From - Film URAVU – Song 'Poomip pennin'
Best Lyricist Award to THIVIYARAJAN VAIRAMUTTU Film URAVU – song 'Nilavu Norunki'

## ரொறன்ரோ நகர காவற்துறையினரின் சீருடையில் 'கமரா'

ரொறன்ரோ காவல்துறையினரில் ஒரு பகுதியினர் கடந்த மாதம் 16ம் திகதியிலிருந்து தமது சீருடையில் ஒளிப்பதிவுக் கமராக்களைப் பொருத்தியவாறு கடமையிலீடுபட்டுள்ளனர். பரீட்சார்த்த திட்டமொன்றின் முதல் நடவடிக்கை இது. பொதுமக்களை விசாரணை செய்யும்போதும் மற்றும் முக்கிய செயற்பாடுகளின் போதும் இந்தக் கமராக்கள் தாமாக ஒளிப்பதிவு செய்ய ஆரம்பித்துவிடும். இத்திட்டத்தைச் செயற்படுத்த சுமார் ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## கூடுதல் உடற் பருமன் புற்றுநோயை அதிகரிக்கும்

இளம் பராயத்தில் கூடுதல் பருமனால் அதிக எடை கொண்டவராக இருப்பவர்கள், வளர்ந்து பெரியவர்களாகும்போது அவர்களுக்கு குதப்புற்று நோய் தோன்றுவதற்கான சாத்தியங்கள் அதிகமிருப்பதாக மருத்துவ ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. சுவீடனில் 35 ஆண்டுகள் 2,40,000 ஆண்களை மருத்துவ விஞ்ஞானிகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தியிருந்தனர். கூடுதல் உடல் பருமனுக்கும் புற்று நோய்க்குமிடையிலான தொடர்பு வலுவானது என் உலகப் புற்றுநோய் ஆராய்ச்சி நிதியம் தெரிவித்துள்ளது. மனிதர்களைத் தாக்கும் புற்று நோய்களில் மூன்றாவது பெரிய இடத்தில் குதப்புற்று நோய் இருக்கிறது. உலகில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 14 ஆயிரம் பேர் புதிதாக குதப்புற்று நோய்க்கு ஆளாகின்றனர்.


Members of the **Ontario Liberal Caucus** Celebrate

***South Asian Heritage Month***


**Hon. Michael Chan**
Markham-Unionville
905-305-1935


**Vic Dhillon**
Brampton West
905-796-8669


**Hon. Brad Duguid**
Scarborough Centre
416-615-2183


**Hon. Mitzie Hunter**
Scarborough-Guildwood
416-281-2787


**Hon. Dr. Helena Jaczek**
Oak Ridges-Markham
905-294-4931


**Hon. Tracy MacCharles**
Pickering-Scarborough East
905-509-0336


**Harinder Malhi**
Brampton-Springdale
905-495-8030


**Kathleen Wynne**
Premier of Ontario
416-325-7200


**Amrit Mangat**
Mississauga-Brampton South
905-696-0367


**Indira Naidoo-Harris**
Halton
905-878-1729


**Dr. Shafiq Qaadri**
Etobicoke North
416-745-2859


**Hon. Mario Sergio**
York West
416-743-7272


**Harinder Takhar**
Mississauga-Erindale
905-897-8815


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங் செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள டும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005



*Register for a Diploma Course and receive a*

*(offer valid until Dec 31, 2014 - some conditions apply)*




NOW ACCEPTING

INTERNATIONAL STUDENTS!

**WWW.COMPUTEK.EDU**

**Toronto Campus**
301-2347 Kennedy Rd.
416.321.9911

**Markham Campus**
202-7 Eastvale Dr.
905.471.3344

**Scarborough Campus**
248-2390 Eglinton Ave. E.
416.285.9941

### Diploma Programs:

- Community Services Worker (CSW)
- Personal Support Worker (PSW)
- Early Childcare Assistant (ECA)
- Medical Office Admin. (MOA)
- Accounting & Payroll Admin.
- Computerized Accounting
- Int. Application Development
- Ent. Network Engineering
- Business Administration
- Network Engineering

**Are you unemployed or under-employed?**

Are you receiving or received EI?

Re-entering workforce after Maternity or Parental leave?

Second Career provides laid-off workers with skills training to help them find jobs in high-demand occupations in Ontario

SECOND CAREER
&
OTHER FUNDING
OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS

Financial assistance may be available for those who qualify




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 85

## இளங்கோ அடிகள் மூத்த ஆழ்வார்

நான் முன்னர் குறிப்பிட்டபடி திருமால் வணக்கமும் சேயோன் வழிபாடும் தொல்காப்பியர் காலம் தொட்டு இருந்து வருகிறது. தொல்காப்பியம் இடைச் சங்க காலத்து இலக்கண நூல் என்பது அறிஞர்களின் துணிபு.

எனவே தொல்காப்பியர் கிமு 500−300 கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம். இடைச் சங்க காலத்து நூல்கள் எல்லாம் அழிந்து போயின. தொல்காப்பியம் பலாரால் போற்றப்பட்ட ஓர் இலக்கண நூல் என்பதால் அது நீருக்கும் நெருப்புக்கும் இரையாகாமல் தப்பிவிட்டது. தொல்காப்பியம் அழிந்தொழிந்திருந்தால் தமிழர்களின் தொன்மை, வாழ்க்கை முறை, பண்பாடுகள் தெரியாமல் போயிருக்கும்.

தொல்காப்பியத்தை முதல் முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் சி.வை. தாமோதரம் பிள்ளை ஆவார். 1891ல் முதல் பதிப்பு அச்சிடப்பட்டது. 1610 சூத்திரங்கள் கொண்ட 3 அதிகாரங்களையும் அவர் வெளியிட்டார்.

தொல்காப்பியம் தமிழ்மக்களின் மிகப் பழமையான ஒரு சமுதாயக் கட்டுமானத்தை படம் பிடித்துக் காட்டுகிறது என்பதில் ஐயம் எதுவுமில்லை.

குறிஞ்சி நில (மலை) மக்கள் வேட்டையாடியும்

முல்லை நில (காடு) மக்கள் ஆனிரை மேய்த்தும்

மருதநில (ஆற்றுப்படுக்கை) மக்கள் பயிர் செய்தும்

நெய்தல் நில (கடலோரம்) மக்கள் மீன் பிடித்தும்

வாழ்ந்த சமுதாயத்தையே தொல்காப்பியத்தில் காணக் கூடியதாக இருக்கிறது.

வடமொழியும், பிறபண்பாடும் தமிழ் மொழியோடும் தமிழ்ப் பண்பாடோடும் உறவுகொள்ளத் தொடங்கிய காலத்தில்தான் தொல்காப்பியம் தோன்றியிருக்கிறது.

தொல்காப்பியரே தனது நூற்பாக்களில் கூறப்படும் விதிகளுக்கு தனக்கு முன்னரும் தனது காலத்திலும் இருந்த புலவர்களது கூற்றுக்களை என்ப, என்மனார் புலவர், மொழிப, யாப்பென மொழிப யாப்பறி புலவர் என்று 287 இடங்களில் சான்று காட்டுவார். எனவே தொல்காப்பியர் தமிழுக்கு புதிய இலக்கணம் வகுத்தார் என்பதைவிட அவருக்கு முந்தியிருந்த இலக்கணத்தைத் தொகுத்து நூல் வடிவில் தந்தார் என்பதே பொருந்தும். தொல்காப்பியருக்கு முன்னர் நூற்றுக் கணக்கான புலவர்கள் இலக்கியமும் இலக்கணமும் படைத்திருக்க வேண்டும். இலக்கியத்தில் இருந்துதான் இலக்கணம் பிறக்கிறது.

## முதற் சங்கம்

கடல் கொண்ட தென்மதுரையில் பாண்டிய மன்னர்களால் நிறுவப் பெற்ற சங்கம் தான் முதற் சங்கமாகும். இச்சங்கத்தை நிறுவிய மன்னன் காய்சின வழுதி என்பவனாவான். காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் ஈறாக 89 அரசர்கள் 4440 ஆண்டுகள் இச்சங்கத்தை நடத்தியதாக இறையனார்களவியல் உரை கூறுகிறது.

இச்சங்கத்தில் அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் போன்ற புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர். 4449 புலவர்கள் தமிழ் ஆராய்ந்து செய்யுள் பாடினர். அவர்களால் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் பாடப்பட்டன.

## இடைச் சங்கம்

தென்மதுரையைக் கடல் கொண்ட பிறகு கபாடபுரத்தில் தொடங்கப் பெற்ற இடைச்சங்கம் 3700 ஆண்டுக் காலம் நடைபெற்றது. வெண்தேர்ச் செழியன் என்ற பாண்டிய மன்னனால் தொடங்கப் பெற்ற இச்சங்கம் முடத்திருமாறன் முடிய 59 மன்னர்களால் நடத்தப் பெற்றது. இச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழியார் வெள்ளூர்க் காப்பியனார் போன்ற 3700 புலவர்கள் பாடினர். இவர்களால் பாடப்பெற்றவை கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல் போன்ற நூல்களாகும்.

## கடைச் சங்கம்

கபாடபுரமும் கடலால் அழிந்த பிறகு தற்போது உள்ள மதுரையில் கடைச் சங்கம் எனப்படுகின்ற மூன்றாம் சங்கம் தொடங்கப் பெற்றது. இரண்டாம் சங்கத்தை நடத்தி, கபாடபுரம் அழியும் போது அங்கிருந்து பிழைத்து வந்த முடத்திருமாறனால் இது தொடங்கப் பெற்றது.

இச் சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 அரசர்களால் நடத்தப் பெற்றது. 1850 ஆண்டுகள் இச்சங்கம் நடைபெற்றது. இச்சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மருதன் இளநாகனார், நக்கீரனார் என 449 புலவர்கள் பாடினர். இதில் தொகுக்கப்பட்ட நூல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் போன்றவை ஆகும்.

முச்சங்கங்கள் பற்றிய மேற்கண்ட செய்திகளை கிபி 8 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இறையனார் களவியல் உரை என்ற நூல்தான் கூறுகின்றது. முச்சங்கங்களும் இருந்த கால அளவு, (11,990 ஆண்டுகள்) பாடிய புலவர்களின் எண்ணிக்கை (8,598 புலவர்கள்) சங்கம் நடத்திய அரசர்கள் (197 அரசர்கள்) →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுமுள்ள.. (23ஆம் பக்கத்திலிருந்து)

போன்ற செய்திகள் முழுமையும் உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை. ஒவ்வொரு அரசரும் சராசரி 62 ஆண்டுகள் ஆண்டார்கள் என்பது சாத்தியமில்லை.

அகப்பொருள் இலக்கணம் கூறும் இந்த நூலை மதுரை ஆலவாய்க் கடவுள் இறையனார் இயற்றினார் என்று நக்கீரர் உரை கூறுகிறது. இந்த நூலுக்கு உரை எழுதிய நக்கீரர் தமது உரைக்கு மேற்கோளாகப் பாண்டிக்கோவை நூலிலுள்ள பாடல்களைத் தந்துள்ளார்.

இருப்பினும் சங்கம் என்ற ஓர் அமைப்பு, பாண்டியர்களால் நடத்தப் பெற்றமை குறித்துச் சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன. எனவே தமிழ்மொழியும் தமிழர் நாகரிகமும் தமிழர் பண்பாடும் ஆகியவற்றுக்கு ஒரு நெடிய வரலாறு உண்டு என்பதற்கு மறுப்பில்லை.

தமிழ் மக்களின் தொன்மையான வழிபாட்டு நெறி வைணவம். திருமால் வழிபாட்டின் காலப்பழமைக்குத் தொல்காப்பியம், பரிபாடல், சிலப்பதிகாரம் முதலியன சான்று கூறி நிற்கின்றன. திருமாலைப் போற்றிப் பாடிய பன்னிரு ஆழ்வார்களில் முதலாமவராகக் கருதப்படும் பொய்கையாழ்வாரின் காலம் கிபி ஏழாம் நூற்றாண்டு என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவரைவிடக் காலத்தால் மிக மூத்தவர் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் (கிபி 2 ஆம் நூற்றாண்டு). அடிகள் இயற்றிய 'ஆய்ச்சியர் குரவை'யே பின்னாளில் இயற்றப்பட்ட வைணவ பக்திப் பனுவல்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் தோற்றுவாயாகவும் விளங்குகின்றது எனலாம்.

காவிரி, வைகை முதலான ஆறுகளும் புகார், உறந்தை, மதுரை, வஞ்சி முதலான் நகரங்களும், குரவைக் கூத்து முதலிய கூத்துகளும், திருமால், பெரியோன், பலராமன் முதலிய தெய்வங்களும் அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும் இந்நூலில் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன. அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன. 'ஆய்ச்சியர் குரவை'யின் மூலம், கண்ணனின் குழந்தைப்பருவ மாயச் செயல்கள் தொடங்கி, அவன் வளர்ந்த பிறகு பாண்டவர்க்காகத் தூது சென்றது உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளையும், திருமால் தன் மற்றைய அவதாரங்களில் நிகழ்த்திய அற்புதங்களையும், சாதாரண மக்கள் ஆடுகின்ற எளிய கூத்தின் வாயிலாக, அழகிய இசைப்பாடல் வடிவிலே சுருங்கச் சொல்லி விளங்கவைத்துள்ளார். இளங்கோ சமயத்தால் சமணராக இருந்தும் புறச் சமயங்களான வைணவம், சைவம், பவுத்தம் பற்றியும் போற்றிப் பாடியிருக்கிறார்.

இராமகாதை படைத்த கம்பர் கம்பநாட்டாழ்வார் என்று பெருமைப் படுத்தப்படுகிறார். கண்ணன் பாட்டுப் பாடிய மகாகவி பாரதியையும் ஆழ்வார்களில் ஒருவராகக் போற்றப்படுகிறார். இவர்கள் அனைவரிலும் காலத்தால் முற்பட்டவரும் திருமாலின் புகழை மிகச்சிறப்பாய் முதலில் பாடியவருமான இளங்கோவடிகள் மூத்த ஆழ்வாராக, முதல் ஆழ்வாராகக் கருதிப் போற்றப்படுகிறார். இளங்பேகா அடிகளாரின் ஆய்ச்சியர் குரவை பாடல்கள் சிலவற்றை அடுத்த முறை பார்ப்போம். (வளரும்)●


# Less Payment Higher Return

100K - Term Life Insurance for 20 years

| AGE | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| Monthly Payment - Male | $12.69 | $12.78 | $12.87 | $14.22 | $17.64 | $25.65 | $39.33 |
| Monthly Payment - Female | $10.80 | $10.80 | $10.89 | $12.75 | $14.40 | $18.99 | $28.44 |

100K - Whole Life Insurance

| AGE | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| Monthly Payment - Male | $43.15 | $48.90 | $57.87 | $68.44 | $81.22 | $103.65 | $122.28 |
| Monthly Payment - Female | $39.00 | $43.15 | $52.20 | $61.76 | $71.07 | $88.33 | $106.78 |

2 வருடங்களுக்கு ஒரு தடவை உங்கள் ஆயுள் காப்புறுதியை மீள்பரிசீலனை செய்தல் அவசியம்!

இலவச ஆலோசனைகளுடன் பூரண விளக்கம் தருகின்றோம்

- Drug, Dental and Medical plan
- Mortgage and Travel Insurance
- RRSP - Loan and Investments
- RESP - Education Saving Plan
- Life Insurance - Term, Whole life
- Disability Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance - Age 40 to 85

Critical Illness Insurance

கொடிய நோய்கள் வராது விட்டால் கட்டிய பணம் முழுவதும் 65 வயதில் திருப்பித்தரப்படும்.

கட்டிய பணத்திற்கு முழு உத்தரவாதம் உள்ளது

Ideas to simplify your Family protection



Mogan Selliah
Insurance Advisor - Royal Brokers

Direct: 416.569.3200

Email: moganselliah@gmail.com

Non Medical Insurance

குறைந்த கட்டணத்தில் 85 வயது வரையிலான மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதி

RESP கல்வி சேமிப்புத் திட்டம்

பிள்ளைகளின் உயர்கல்வி சேமிப்புத் திட்டத்தின் மூலம் அரச மானியமாக $9200 வரை பெறமுடியும்


Royal Brokers · RBC Insurance · Industrial Alliance · Assumption Life · Sun Life Financial · Equitable Life · La Capitale · BMO Insurance

Knowledge. Passion. Results.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்







- மரண அறிவித்தல்கள் வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

## HEAVEN CARES

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com


Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Director

**416-993-0826**

Call: **Christeen Seevaratnam**


Funeral Counsellor

**416-258-6759**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..




- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening


*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

**www.promarawards.com 416-291 2344**
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5




வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***






- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days


Mortgages & loans arrangements

**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

**416- 898 4846**







# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

**சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# ஐபிஎல் தொடரில் மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் ஆதிக்கம்!

நடப்பு ஐபிஎல் தொடரில் மேற்கிந்திய தீவுகள் வீரர்களின் ஆதிக்கம் அதிக -மாகவே இருக்கிறது. தற்போது நடைபெற்று வரும் ஐபிஎல் போட்டியில் பிராவோ, பொல்லார்ட்,

கிறிஸ்கெய்ல், வெயின் சுமித், லெண்டில் சிம்மன்ஸ் ஆகிய மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

## பிராவோ

பிராவோ சென்னை அணியில் விளையாடி வருகிறார். சகலதுறை ஆட்டக்காரரான இவர் களத்தடுப்பு, பந்துவீச்சு, துடுப்பாட்டம் என அசத்தி வருகிறார். அந்தரத்தில் பறந்து பந்தை பிடிப்பதில் கில்லாடியாக இருக்கிறார்.

இவர் 15 போட்டிகளில் 23 விக்கெட்டுகள் கைப்பற்றி இருக்கிறார். 8 இன்னிங்சில் 186 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஒட்டு மொத்த ஐபிஎல் போட்டியில் பிராவோ 102 விக்கெட் எடுத்துள்ளார். 1154 ஓட்டங்கள் குவித்துள்ளார்.


## பொல்லார்ட்

பொல்லார்ட் மும்பை இந்தியன்ஸ் அணியில் அதிரடி காட்டி வருகிறார். இவர் 2010ல் இருந்து மும்பை அணிக்காக விளையாடி வருகிறார்.


சகலதுறை ஆட்டக்காரரான இவர் 15 ஆட்டத்தில் 383 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 2013ல் அதிரடியாக விளையாடி மும்பை அணி கிண்ணம் வெல்ல காரணமாக இருந்தார்.

## கிறிஸ் கெய்ல்

அதிரடி மன்னன் கிறிஸ் கெய்ல் பெங்களூர் அணியில் விளையாடி வருகிறார். 13 ஆட்டத்தில் 450 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.





அதிகபட்ச ஓட்டங்கள் 117 ஆகும். ஒட்டுமொத்த ஐபிஎல் தொடரில் 5 சதம் அடித்துள்ளார். 81 ஆட்டத்தில் 3158 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 227 சிக்சர்கள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெயின் சுமித்

சென்னை அணியின் சிறந்த தொடக்க ஆட்டக்காரராக வெயின் சுமித் இருக்கிறார். இவர் 14 ஆட்டத்தில் விளையாடி 325 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஒரு அரை சதம் அடித்துள்ளார்.

## லெண்டில் சிம்மன்ஸ்

ஆரோன் பிஞ்ச் காயம் அடைந்ததால் லெண்டில் சிம்மன்சுக்கு மும்பை அணியில் வாய்ப்பு கிடைத்தது.

தொடக்க வீரரான இவரது அதிரடி ஆட்டம் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்து வருகிறது. அவர் 12 ஆட்டத்தில் 472 ஓட்டங்கள் எடுத்துள்ளார்●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Heritage Education Funds

RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

## கோட்சேயின்...

பிறர் என் சார்பாக கருணை வேண்டுவதையும் நான் விரும்பவில்லை. "கொலைக்கு நானே பொறுப்பு" என்னோடு பலர் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறார்கள். கொலைக்கு சதி செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நான் முன்பே கூறியபடி என் செயலுக்கு கூட்டாளிகள் யாரும் கிடையாது. என் செயலுக்கு நானே முழுப்பொறுப்பு. அவர்களை என்னோடு குற்றம் சாட்டி இருக்காவிட்டால் எனக்காக எந்த எதிர்வாதமும் செய்திருக்கமாட்டேன்.

வீரசவர்க்காரின் தூண்டுதலில் நான் செயல்பட்டேன் என்று கூறுவதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். அது என் அறிவுத்திறனுக்கு ஏற்படுத்தும் அவமதிப்பாகக் கருதுகிறேன்.

இந்து மதத்தை அழிக்க முயலும் சக்தியை ஒழித்துவிட்டேன் என்ற மன நிறைவு எனக்கு ஏற்பட்டுள்ளது. மானிட வர்க்கத்தின் நலனுக்காகவே இந்தச் செயலை செய்தேன். இந்தச் செயல் முற்றிலும் இந்து தர்மத்தையும், பகவத் கீதையையும் அடிப்படையாகக் கொண்டதுதான். நம் நாடு "இந்துஸ்தான்" என்ற பெயரில் இனி அழைக்கப்படட்டும். இந்தியா மீண்டும் ஒரே நாடாக வேண்டும்.

இந்திய வரலாற்றை எவ்வித பாரபட்சமும் இன்றி நேர்மையாக எழுதக்கூடிய வரலாற்று ஆசிரியர்கள் எதிர்காலத்தில் உருவானால், அவர்கள் என் செயலை மிகச்சரியாக ஆராய்ந்து, அதிலுள்ள உண்மையை உணர்ந்து, உலகறியச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இவ்வாறு கோட்சே கூறினார்.●

## பூச்சி உருண்டை..


மருத்துவத்தைப் பொறுத்தவரையில் அதை உட்கொண்டிருந்தால் அதன் பாதிப்பை குறைப்பதற்கு Activated charcoal உபயோகிப்பது உண்டு. குருதி சேதமடைந்திருந்தால் குருதி மாற்றீடு செய்ய நேரலாம். நாளம் ஊடாக திரவங்களை ஏற்றவும் தேவை ஏற்படலாம்.

செல்லக் குழந்தைக்காகப் பயந்து வந்த தாயானவள் தங்களது செல்லப் பூனைக்காகவோ நாய்க்காகவோ மருத்துவரிடம் செல்ல நேரலாம். ஏனெனில் பாதிப்பு உங்கள் வீட்டில் உள்ள மனிதர்களுக்கு மட்டுமல்ல வளர்ப்பு மிருகங்களிலும் ஏற்படலாம்.

எனவேதான் பூச்சி உருண்டைகளைப் பாவிப்பதில் அவதானம் தேவை என்றோம்.●

The Children's Education Trust of Canada
offered to the public by

Children's Education Funds Inc.



10 டாலரிலிருந்து ஆரம்பித்து 7200 டாலர்கள் வரை கனடா அரசாங்கம் வழங்கும் நன்கொடையைப் பெற்று (20 வீத Grant) உங்கள் பிள்ளைகளதும் பேரப்பிள்ளைகளதும் கல்வி வாய்ப்பை ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Dealing Representative

418 899 6044

email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

51

"உங்களது ஒவ்வோர் எண்ணமும் உண்மையில் ஒரு மெய்யான பொருள்தான். அது ஒரு சக்தி."

இந்த வாக்கியத்தை தனது நூலில் எழுதி வைத்தவர் பிரென்டிஸ் மல்போட் என்ற அறிஞர்.

இதிலிருந்து சிந்திப்போமானால் எங்கள் மனக்கண்ணில் ஒன்றினை எம்மால் பார்க்க முடிந்தால், அது கண்டிப்பாக எமது கைகளில் தவழும். ஒரே விடயத்தை நாம் எண்ணிக் கொண்டிருந்தால் எங்களது கனவு நிறுவனத்தைக் கட்டியெழுப்புவது போல, எங்களது ஆத்மார்த்தமான வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிப்பதுபோல, ஒரு புத்தம்புதிய வாகனம் எம்மிடம் இருப்பதுபோல இருக்கும்.

எமது மனம் ஒரு ஒளிபரப்புக் கோபுரம் போன்றது. ஆனால் அதனைவிட சக்தி வாய்ந்தது. எமது வாழ்க்கையைப் படைப்பதும் அதுவாகத்தான் இருக்கும். மன ஆற்றலின் துடிப்புகள் இருப்பதிலேயே மிகவும் சிறந்தவை. அதனால் அவை இருப்பதிலேயே அதிக சக்தி வாய்ந்தவையாக விளங்குகின்றன. இவற்றையே வில்லியம் ஷேக்ஸ்பியர் போன்ற அறிஞர்கள், பீத்தோவன் போன்ற இசைக் கலைஞர்கள், லியனார்டோ டாவின்ஸி போன்ற ஓவியர்கள், சோக்ரட்டீஸ் பிளாட்டோ போன்ற சிந்தனையாளர்கள், ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் எமக்குக் காட்டியுள்ளனர். மனிதர்கள் என்ற முறையில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமக்கு என்ன வேண்டுமோ அது குறித்த எண்ணங்களை நம் மனதில் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதோடு அவை குறித்த முழுத் தெளிவையும் நம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான்'

பொதுவாக பெரும்பாலானவர்கள் என்ன வேண்டாம் என்பதையே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். என்ன வேண்டுமென எண்ணுவதே சிறந்த ஈர்ப்பு விதியாகும். நம் மனதில் தோன்றும் அனைத்து எண்ணங்களையும் கண்காணிப்பது இயலாத காரியம்தான். ஒரு நாளில் எம் மனதில் அறுபதாயிரம் எண்ணங்கள் தோன்றுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவையெல்லாவற்றையும் எம்மால் கட்டுப்படுத்த முடியுமா என்பதே கேள்வியாகிறது. எனவே இவற்றுள் சிறந்தவைகளை மட்டுமே தெரிய வேண்டும்.

எமக்குள் புகுந்துள்ள மோச உணர்வுகள் பலவாகும். மனச்சோர்வு. கோபம். காழ்ப்புணர்வு. பழிவாங்கும் துடிப்பு. குற்றவுணர்வு என்பவை ஏற்படும் போதெல்லாம் எமது நிதானம் பறிபோய் விடுகிறது. நாள் முழுவதும் அடிக்கடி நின்று நிதானித்து முடிவுகளை எடுக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து செய்தால் எமது உணர்வுகள் குறித்த புரிதல் அதிகரிக்க ஆரம்பிக்கும்.

எமது எண்ணங்கள் எந்த அலைவரிசையில் இருக்கின்றது எனவும் இதனால் உணர முடியும். எமது நல்ல உணர்வுகள் தூண்டப்படுமானால் எமக்குள் பரவசம். மகிழ்ச்சி. அன்பு. நன்றியுணர்வு என்பன தோன்றும். 'நான் மகிழ்ச்சியாக இருப்பதை உணர்கிறேன்' என்ற உணர்வை தொடர்ந்து மனதில் உச்சரிப்போமாக'●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

தமிழர் தகவல் பிரதிகளை மாதாந்தம்
முத்திரைக் கட்டணம் செலுத்தி
தபாலிலும் பெறமுடியும். விபரங்களுக்

416 920 9250

e-mail: tamilsinfo@sympatico.ca



## ALL COUNTRIES TAMILS YELLOW PAGE

**CANADA & INTERNATIONAL MEDIA, NEWS, WEBSITE**
**BUSINESS ADVERTISEMENTS & DIRECTORY**

BIRTHDAY WISHES & ANNIVERSARY :- Wedding & Business

ARANGETRAM :- Bharatham, Mirudangam, Veena & Etc... - MATRIMONIAL :- Marriage Broker Services

JOB AGENCY :- All Kinds of Employment Services - FUNERALS :- Obituaries & Etc...

2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD UNIT 3C LOWER LEVEL SCARBOROUGH - TORONTO - ONTARIO - M1K 2M2 - CANADA
TEL: 416 644 7273 - TEL & FAX: 416 613 2919 - MOB: 416 752 4444 WEB: WWW.TAMILSYELLOWPAGES.COM E-MAIL: TYP@TAMILSYELLOWPAGES.COM

WWW.ENGLISHYELLOWPAGE.COM - WWW.ASIANSYELLOWPAGE.COM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# வாழ்க்கை ஓர் தெளிந்த நீரோடை

வாழ்க்கை ஓர் தெளிந்த நீரோடை. இதைப் பாவிப்பது நம் தின வேலையும் பணியுமாம். ஆதிகாலம் துவக்கம் இவ்வோடைகள் சேர்ந்து சிற்றோடைகளாகப் பாய் விரித்து ஓடின. கக்கானியர்களும், தண்டையல்களும் நாமே காலத்துக்குக் காலம் அவை திரண்டு நதிகள் ஆயின. அவை பெருகி, வளர்ந்து பேராறுகள் ஆயின. மக்கள் பாவனையாற் துறை பொருந்த கங்கா நதிகளுமாயின. அவற்றின் புனிதம் மாசுறு வண்ணம் பேணுவது, பரப்பதும் இயற்கையின் புனிதமாயின. கங்கை புனிதமானது, காவேரி இயற்கையை வளமாக்கினது. குடியேற்றமும் இந்நதிக் கரைகளிலேயே அமைந்தன. எனவே வளமார்ந்த வாழ்வின் வடிகால்கள் – வளம் நிறைந்த சமுதாயத்தின் இருப்பிடங்களுமாயின. ஆக நாமும் அங்கே நீராடிப் புனிதம் அடைவோம்: காப்போம். பாரதிக்கு முன்னே பாரத தேயம் கண்ட ஆற்றுப் படுகைகள் வரலாற்றை வண்ணமுற வடித்தன. மனித்தப் பிறவியின் இடையறா அன்பான முயற்சியால் உலக வரலாறு வண்ணமுற, வடிவமும் உருவானது.

இன்று நாம் அல்லாடுகிறோம். ஏன்? அமைதி தேடி, ஆரோக்கியம் நாடி, அமைதி நோக்கி ஓடிக் கடலிலே சங்கமும் ஆகிறது. எத்தனையோ கோடி உயிர் இனங்களுள் மனித்தப் பிறவி மேலானது. இந்த மானுடம் சோபை இழந்தும் காணப்படுகிறது. பழைய ஏடுகளையும் புனித வரைபடங்களையும் இணைத்துப் பார்ப்பின் உண்மை வெளிப்படுமன்றோ! அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்றார் ஔவைப் பிராட்டி. அரிது தான். இருந்தும் கூன் குருடு நீங்கிப் பிறத்தல் அரிது, நோய் நொடி நீங்கிப் பிறத்தல் அரிது. இந்த வாய்ப்பைப் பெற்றாலும், தானமும் தவமும் தான் செய்தல் அரிது என பொன் எழுத்துகளிற் பொறித்தாள் பிராட்டி. சரி இதோடு முடியவில்லை. மனிதனிலே பாம்பு உண்டு சிங்கமுண்டு, புலி உண்டு, நீர் வாழும் பிராணியுண்டு. எந்தப்படியெல்லாம் சொல்லி வைத்துப் போயினர் பாருங்கள். ஆறு அறிவுடையது மனிதம். ஆனால் அஃதிலொ– ன்று குறைந்தால் மா ஆகிவிடும். இப்படி விளக்கம் செய்தவர்கள் பலர். தாயுமான சுவாமிகளும் "எண்ணரிய பிறவி தனில் மானிப் பிறவிதனில் மானிடப் பிறவிதான் அரிது அரிது காண், இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, எது வருமோ அறிகிலேன் எனப் பாட்டிசைத்தார். மனிதன் உயர்ந்தவன்தான். ஆனால் நேர் சீரான மனிதம் கெட்டுப் போகக்கூடாது எனவும் குறிப்பிட்டனர். இப்படி வரிசைப்படுத்தினால், மிகமிக மேலானது மனிதம் – அப்பர் என்ன சொன்னார்?

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்

குமிண்சிரிப்பும்

பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்

பால்வெண்ணீறும்

இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும்

காணப்பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவவே

இந்த மாநிலத்தே

– அப்பர்

நீரோடை, நீரோட்டம். இவையொரு இயற்கை விளைவு. தெளிந்த நீர் முகத்தையே நிழற்படுத்துகிறது. தெளிந்த நீர் புனிதமாயும் பளிச்சிடுகிறது. இதை யாம் பல்வேறு கட்டங்களிலே காண்கிறோம். தெளிந்த நீரோடை மட்டுமன்றி இரத்தினக் கற்களிலும் ஒரு நீரோட்டம் உள்ளே பளிச்செனப் பிரதிபலிக்கிறது. முத்து, வைரம் என்பவற்றிலே இவ்வமைப்பு உலகப்புகழ் வாய்ந்ததை நாம் அறிவோம். உலகில் உயர்ந்த இரத்தினக் கற்கள் விலை உயர்ந்த பொருளாக எடை போடப்பட்டிருக்கின்றது. நவரத்தினங்கள் நமக்குச் சாட்சியங்களாக மிளிர்கின்றன. கிளியோபத்ரா பாவித்த ரத்தினக் கற்கள் மிகமிக உயர்ந்தவை. இப்படித் தேடிப் பார்க்கின்ற இரத்தினக் கற்கள் போன்றே மனித வாழ்க்கையும் உயர்ந்தவை. பட்டை போட போடத்தான் பளபளக்கும் வைரம் என அழ.வள்ளியப்பா பாடித் தந்துள்ளார். இரத்தினம் மட்டுமன்றி வாழ்வும் இரத்தினம்தான். தலைமகன் வந்துவிட்டால் மதிப்பும் மரியாதையும் எவ்வளவு உயர்ந்தது. தண்ணீர் எவ்வளவு மேலானது. முத்து முத்தான நீர் தளும்பும் ஓடைகள், குளங்கள், முத்தாய் மிளிரும் தண்ணீர். சிறிது வாசனைத் திரவியங்களைக் கலந்துவிட்டால் – மங்களகரமான வேளையிலே பன்னீர் தெளித்து அகமகிழ்கிறோம். உலகெங்கும் இரத்தினச் சுரங்கங்கள். பிரபல்யமான சுரங்கங்களை நாம் அறிவோமன்றோ. ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா முன்னுதாரணம். ஏன் அங்கே போகின்றீர், எம் இலங்கையிலே இரத்தினக் கற்கள் நிறைந்த சுரங்கங்கள் உண்டு. இதனையிட்டுத்தான் இரத்தினபுரி வந்தது. நவரத்தினம் பெறுமதியானது. இந்த இரத்தினக் கற்கள் தரம் பிரிக்கையில் நீரோட்டம் தென்படும். ஒல்லாந்து நாட்டில் இத்தொழில் நீரோட்டம் காணுதல் வாழ்வும் இரத்தினமாய் அமையும். வாழ்வில் நீரின்றி அமையாது எனத் திருவள்ளுவர் பாடியுள்ளார். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

இரத்தினத்துவீபம் என வர்ணிக்கப்படும் இலங்கையில் நீண்டகாலம் இரத்தினக் கற்கள் விளைவாவதும் இயற்கை. மன்னாதி மன்னர்கள், பிரபுக்கள், வர்த்தகர்கள் இலங்கையின் இரத்தினக் கற்களை விரும்பி வாங்கினர். இராசாக்கள், இராணிகள் எல்லோருமே முடிகளிலே இரத்தினக் கற்களை விரும்பி அணிந்தனர். ரோமாபுரியிலும் அவ்வண்ணமே இரத்தினக் கற்கள் மேலான பெறுமானம் உடையன. இப்பார்வையிலேயே இரத்தினம், வைரம், வைடூரியம் என்பன பிரக்கியாதி பெற்றவை.

இந்த நீரோட்டம் பார்க்கும் நுட்பம் ஏலவே சொன்னோமே. ஒல்லாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகளில் நிறைய இரத்தினம் மதிப்புக்குரியது. இந்த நீரோட்டம் பார்ப்பது பண்டைய வழக்கம். மகா சமுத்திரங்களில் இந்த நீரோட்டம் பார்ப்பது என்பது இரத்தினக் கற்களையன்று. கடலிலே பாயும் நீரோட்டங்களையே. இதை நாம் அறிவோம். பல நீரோட்டங்கள் பாரிய கப்பலையே புரட்டினதாகச் சம்பவங்கள் உள. புனித நீர் வாழ்வுக்குகந்தது. ஆக நீர் போல நீரோட்டம் உள்ள நீர் சுகத்துக்கு ஆதாரமானது. நீரோட்டம்போல நல்ல சந்ததியை கட்டி வளர்க்கவும் வேண்டும். எனவே ஒரு நாட்டின் மதிப்பும் பெருமையுமான இந்த மனித குலம் சிறக்கச் சுகாதார வாழ்வு தேவை.

நீரோட்டம் தேவை நல்ல பரம்பரையை வளர்ப்போமாக.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனாஸ் & கோ
அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்

பூஜைப்பொருட்கள்
மல்லிகைச்சரம்
பூக்கள் பூமாலைகள்
பரதநாட்டிய ஆபரணங்கள்
வீடியோ புகைப்படம்
திரைப்படங்கள் பாடல்கள்

All temple pooja items
Fresh jasmine and flower garlands
Dance items
HD Video & Photography
Passport photos

"உங்கள் இல்லம்தோறும் இறையருள் பெற"

**416-292-0033** **www.archanas.ca**

**2950 Kennedy Rd. Unit 6, Scarborough (One Block North of Finch)**

**BUY - SELL - LEASE**

for prompt & professional service

call

**Balamurale** Nagarajah
Sales Representative

Direct
**416-727-3843**


Century 21
INNOVATIVE REALTY INC.
Independently Owned And Operated BROKERAGE
Tel: 416-298-8383

balan homes






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SOLD**

**23 Killick Road**
**Brampton ON**
(Sandalwood/Creditview)

**OVER ASKING**

**363 Morningside Ave.**
**Scarborough, ON**
((Morningside/Ellesmere)








**Fully Detached 5 Bed Room Mattamy Built**
**9 Ft Ceiling Home. Practical Layout With Den/Office area. Hardwood Floors. Spacious Upgraded Kitchen with S/S Appliances and Granite Countertop. Master with Full Ensuite, Standing Shower.**
**All Bed Rooms Good Size.**

Bungalow
Fully Renovated House
Bedrooms: 3 + 3
Basement: 3 Bedrooms with Seperate Entrance

**IDEAL FOR NEW DEVELOPMENT**



**வீடு, வியாபார நிலையங்களை வாங்க விற்க**

கனடியத் தமிழர் சமூகத்தில்
நம்பிக்கையான ஒரு முகவர்

**கமல் நவரட்ணம்**

அடமான (Mortgage)
ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்


**Kamal** Navaratnam
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

***Trust and reliable services***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org